விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# வலம்புரி

# VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034, தை21 செவ்வாய்க்கிழமை (04.02.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 47

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## புலிகளின் ஆயுதங்களைக் களையாமல்

# பாதுகாப்பு வலயத்தில் இருந்து படையினர் வெளியேறக் கூடாது!

## இராணுவத் தளபதிகளுடனான சந்திப்பில் சதீஸ் நம்பியார் வலியுறுத்து

(நமது நிருபர்)

**இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கு பங்கம் ஏற்படாத வகையில் செயல்படுமாறும்,அதிஉயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து படையினரை அகற்றி விட்டு மீள்குடியேற்றத்திற்கு மக்களை அனுமதிப்பதாயின் புலிகளிடம் உள்ள ஆயுதங்களின் செயலிழப்பைக் கட்டாயமாக வலியுறுத்த வேண்டுமென்று இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சதீஸ் நம்பியார் இலங்கை அரசை வற்புறுத்திக் கேட்டுள்ளார்.**

அதி உயர் பாதுகாப்பு வலய மீள் குடியேற்றம் தொடர்பாக இலங்கையரசுக்கு ஆலோசனை வழங்குவதற்கு கொழும்பு வந்துள்ள இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சதீஸ் நம்பியார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ மற்றும் இராணுவ உயரதிகாரிகளையும் சந்தித்து ஆலோசனை நடத்தியதுடன்,விபரங்கள் பலவற்றையும் கேட்டறிந்து கொண்டார்.

உயரதிகாரிகளுடனான சந்திப்பை அடுத்து,இலங்கை அரசிற்கு சில ஆலோசனை வழங்கி அவற்றை நடைமுறைப் படுத்துமாறும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை காலை கொழும்பு வந்து சேர்ந்த சதீஸ் நம்பியார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ, அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

(10ம் பக்கம் பார்க்க)

## நம்பியார்-பியுறுஹெவ்டே நேற்று சந்தித்துப் பேசினர்!

### உயர் பாதுகாப்பு வலயம் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சதீஸ் நம்பியார், நேற்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்லைவர் மேஜர் ஜெனரல் பியுறு ஹெவ்டேயைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இச் சந்திப்பின் போது வடக்குக் கிழக்குப் பகுதியிலுள்ள இராணுவ அதியுயர்பாதுகாப்பு வலையங்கள் தொடர்பாகவும்,அதனால் ஏற்பட்டுளள சிக்கல்கள் குறித்தும் விரிவாக

(10ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் போர் வெடித்தால் அதனை எதிர் கொள்ள முடியும்

### பிரதமர் ரணில் உரை

(கொழும்பு)

வடக்குக் கிழ்கில் மீண்டும் யுத்தம் வெடிக்குமானால் அதனை எதிர் கொள்ளக் கூடிய பொருளாதார வல்லமை நாட்டிற்கு இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

ஜககிராவைப பகுதியில் இடம் பெற்ற கூட்டமொன்றில் பிரதமர் ரணில் விககிரமசிங்கா உரையாற்றும் போது மேலும் தெரிவித்திருப்பதாவது.

தற்போதைய சூழ்நிலையில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு

(10ம் பக்கம் பார்க்க)

## ஆயிரம் கைதிகளுக்கு இன்று விடுதலை

(கொழும்பு)

55வது சுதந்திரதினத்தை முன்னிட்டு நாட்டின் பல்வேறு சிறைகளில் உள்ள ஆயிரம் கைதிகளுக்கு பொது மன்னிப்பு அளித்து அனைவரும் இன்று விடுதலை செய்யப்படவுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உத்தரவுக்கு அமைவாகவே இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படவுள்ளனர். (இ)

## சாதாரண பெண் சிப்பாய்க்கு முப்படைத் தளபதிகள் "சலூட்"

### நேற்றைய ஒத்திகையில் நடந்தது

(கொழும்பு)

இலங்கையின் 55வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு நேற்று நடத்தப்பட்ட ஒத்திகை நிகழ்ச்சியினால் இராணுவத் தளபதிகளுக்கு தர்ம சங்கடமான நிலை ஏற்பட்டது.

இன்று நடை பெறும் சுதந்திர தினக் கொண்டாட்ட நிகழ்ச்சிக்கான ஒத்திகை ஒன்றில் ஜனாதிபதி நிற்க வேண்டிய மேடையில் ஒரு இள நிலை பெண் பாதுகாப்பு அதிகாரி நின்று மூத்த இராணுவ அதிகாரிகளின் சலூட் மரியாதையைப் பெற்றுக் கொண்டமையே அவர்களின் தர்ம சங்கட நிலைக்குக் காரணமாகும்.இவ் ஒத்திகை நிகழ்ச்சிக்கான சலூட் மரியாதையை ஏற்பதற்கு ஜனாதிபதியின் மூத்த சகா ஒருவர் அனுப்பப்படுவதாகவும். ஆனால் இம் முறை ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த பெண்

(10ம் பக்கம் பார்க்க)



அரசும்,விடுதலைப்புலிகளும் நேற்று வவுணதீவில் சந்தித்த போது..

## 55வது சுதந்திர தினம் இன்று குடா நாட்டில் துக்கம் அனுஷ்ட்டிப்பு

### யாழ்.செயலகத்தில் தேசியக் கொடி ஏற்றப்படும்

(தென்மராட்சி)

நாட்டின் 55வது சுதந்திர தினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்கும்படி யாழ்.மாவட்டத்தில் உள்ள 25க்கும் மேற்பட்ட பொது அமைப்புக்கள் பகிரங்க வேண்டு கோள் விடுத்துள்ளன.

இதன் பிரகாரம் குடா நாடெங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப் படுவதுடன்,பொது மக்களும் கறுப்புப் பட்டிகளை அணிந்து தமது அன்றாடக் கடமைகளை ஆற்றவுள்ளனர்.

இதே சமயம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்(10ம் பக்கம் பார்க்க)

## முன்னாள் தளபதி நம்பியார் நாளை யாழ். வருகிறார்!

### யாழ்.செயல்கத்தில் விஷேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சதீஸ் நம்பியார் நாளை யாழ்.குடா நாட்டிற்கு வருகை தரவுள்ளார்.

வட பகுதி இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து குடா நாட்டு மக்களின் உணர்வலைகளையும், கருத்துக்களையும் அறிந்து கொள்வதற்கும்,உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களை நேரில் பார்வையிட்டு யாழ்.படைத் தளபதிகளுடன் அவ் விடயம் குறித்துப் பேசசு நடத்துவதற்குமே அவர் குடா நாட்டிற்கு வருகை தருகிறார்.

யாழ்.வரும் தளபதி நம்பியார் நாளை பிற்பகல் 3மணிக்கு யாழ்.அரச செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில நடைபெறும் விஷேட கலந்துரையடலில் கலந்து கொள்வார்.

இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள், அரச சார்பாற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள்,ஐ.நா.அமைப்புக்களின் அதிகாரிகள் மற்றும் பத்திரிகையாளர்கள் கலந்து கொள்வர். (இ-4,77,43)

## எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ஐ.கே.குஜ்ராலுடன் சந்திப்பு

(புதுடில்லி)

இந்தியாவிற்கான திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு அங்கு சென்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஐ.கே.குஜ்ராலை நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இலங்கையில் தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாகவும், வடக்குக் கிழக்குப் பிரச்சினை,அது தொடர்பாக அரசு மேற்கொண்டு வரும சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் முன்னாள் பிரதமர் குஜ்ராலிடம் எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ விளக்கிக் கூறியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த குஜ்ரால்

(10ம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக் கழகத்திற்கு மேலும் 61 மாணவர்களுக்கு விஷேட அனுமதி

(யாழ்ப்பாணம்)

விஷேட அனுமதியின் கீழ் யாழ். பல்கலைக் கழகத்திற்கு மேலும் 61 மாணவர்களுக்கு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

மருத்துவம்-9,விவசாயம்-10,உயிரியல் விஞ்ஞானம்-9,பெளதிக விஞ்ஞானம்-6,முகாமைத்துவம்-14,வர்த்தகம்-13 என்ற தொகையில் இவ்வருட விஷேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு;மருத்துவம்-எல்.பிரதாப்,எல்.சிவரூபன்,பி.அரவிந்தன், பீ.கேதாரினி, பீ.நந்தினி, எஸ்.கலைச்செல்வி, எம்.சாமினி, எம்.வாசுதேவன்,எம்,கரிகாலன்.

விவசாயம்-எஸ்.கமலேஸ்வரன், கே.அகல்யா,பி.செல்வகுமார்,ஜீ.பார்த்தீபன்,கே.வன்னியசிங்கம்,ஆர்.சசீலன், ரீ.கந்தசாமி,ரீ.சிவசோதி,ரீ.கிருஷ்ணராஜ்,எஸ்.ரூபாராதா.

உயிரியல் விஞ்ஞானம்-ஜெ.தனபாலசிங்கம்;கே.கியாந்தி,எஸ்.உமா, ஆர்.சுஜித்தா,எஸ்.சிவானி,எஸ்.நிவேதா, எஸ்.துளசி,ஈ.ஸ்ரீதரன்,என்.கண்ணன்.

பெளதிக விஞ்ஞானம்-ரீ.வசீகரன், பி.திசானி,பி.பாஸ்கரன்,எஸ்.குருசங்கர்,எஸ்.கஜீபன்,கே.ஜாதுகுலன்.

(03ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்







# முரண்டு பிடித்த ஐ.சி.சி முடிவை மாற்றியது

## ''கென்யா'' போட்டி இடம் மாறுகிறது

உலகக் கிண்ணப் போட்டி தொடங்க இன்னும் 5 நாட்களே உள்ள நிலையில், வீரர்கள் பற்றிய விவாதங்கள் குறைந்து விட்டது. இப்போதெல்லாம் கிறிக்கெற் ரசிகர்கள் சர்வதேச போட்டிகளில் உள்ள பிரச்சினைகளை மட்டுமே விவாதிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. வீரர்கள் ஒப்பந்தம் சிம்பாவ்வேயில் பாதுகாப்பு குறைவு போன்ற பிரச்சினைகளின் தொடர்ச்சியாக கென்யா தற்போது தலைப்புக்களில் இடம் பிடித்து வருகிறது.

கென்யாவில் தீவிரவாதிகளின் தாக்குதல் பீதி அதிகம் உள்ளதால், அங்குள்ள போட்டியை வேறு இடத்திற்கு மாறற வேண்டுமென்று நியூசிலாந்து கோரிக்கை வைத்தது. ஆனால் ஐ.சி.சி. கென்யாவில்தான் போட்டி நடக்கும் என்று உறுதியாகக் கூறியது. நீண்ட விவாதத்திற்கு பின்னர் கென்யாவில் நடக்கும் போட்டியில் கலந்து கொள்ள மாட்டோம் என நியூசிலாந்து அறிவித்தது. பிரச்சினை அங்கு தான் வெடித்தது. கென்யாவில் கலந்து கொள்ளவில்லை என்றால் வெற்றிப் புள்ளி கிடைக்காது என்று சர்வதேச கிறிக்கெற் கவுன்சில் மிரட்டிப் பார்த்தது.

எந்த மிரட்டலுக்கும் பலன் கிடைக்கவில்லை. இதையடுத்து கென்யாவில் நடைபெறும் போட்டியை வேறு இடத்திற்கு மாற்றுவது குறித்து ஐ.சி.சி. பரிசீலனை செய்து வருகிறது. கூடிய விரைவில் புதிய இடம் பற்றிய தகவல்கள் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# சூதாட்டக்காரர்களை கண்காணிக்க முடிவு

நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிறிக்கெற் போட்டியின் போது சூதாட்டக்காரர்களை கண்காணிக்க தென் ஆபிரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

இதற்காக தென் ஆபிரிக்காவுக்கு வரும் பார்வையாளர்கள் மீது தனிக் கவனம் செலுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி சர்வதேச கிறிக்கெற் கவுன்சிலின் சூதாட்ட தடுப்பு அதிகாரிகளிடமிருந்தும் சிறப்புப் பட்டியல் ஒன்றும் பெறப்படடுள்ளது. இந்தப் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் புரோக்கர்களை தீவிரமாக கண்காணிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கிறிக்கெற்றில் சூதாட்டம் அளவுக்கு அதிகமாக பரவிவிட்டதை அடுத்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்திய அணித்தலைவர் அசாருதீன் மற்றும் தென்னாபிரிக்க அணித் தலைவர் குரேஞ்சே உட்பட பல வீரர்களும் சூதாட்டத்தில் குற்றவாளிகளாக சிக்கியது குறிப்பிடத்தக்கது.

# ஸ்டீவ்வோ–மார்க்வோ அணியில் இல்லை

## ஆஸி. ரசிகர்கள் விரக்தி

உலகக் கிண்ணக் கிறிக்கெற் போட்டிக்கான அவுஸ்திரேலிய அணியில் முன்னணி ஆட்டக்காரர்கள் ஸ்டீவ்வோ மற்றும் மார்க்வோ ஆகியோர் இடம் பெறவில்லை.

உலகக் கிண்ணப் போட்டியில் ஆட ஸ்டீவோ கடுமையான முயற்சிகள் மேற்கொண்டார். ஆனால் கடைசி வரை அவருக்கு வாய்ப்புக் கொடுக்க அவுஸ்திரேலிய தேர்வுக் குழுவினர் மறுத்து விட்டனர். இங்கிலாந்தில் கடந்த முறை நடந்த உலகக் கிண்ணப் போட்டியில் அணிக்கு தலைவராக இருந்தவர் ஸ்டீவோக்.

சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்ற முக்கிய காரணமாக இருந்த ஸ்டீவோக் அணியில் இடம் பிடிக்காமல் போனது அவுஸ்திரேலிய ரசிகர்களுக்கு விரக்தியைக் கொடுத்துள்ளது. சில அவுஸ்திரேலிய பத்திரிகைகளும வருத்தம் தெரிவித்துள்ளன.

உலகக் கிண்ணக் போட்டிகளை பார்க்கும் விருப்பத்தை குறைத்து விட்டதாக ரசிகர் ஒருவர் வருத்தம் தெரிவித்தார். உலகக் கோப்பைக்கு தேர்வு செய்யப்பட்டு இருப்பது அவுஸ்திரேலியர்கள் இல்லாத அணி என்று பத்திரிகை ஒன்று வர்ணித்துள்ளது.

அணியில் இடம் கிடைக்காமல் போனாலும் ஒட்டுமொத்த அவுஸ்திரேலிய ரசிகர்களை உணர்வு பூர்வமாக சிந்திக்க வைத்த இந்த வோக் சகோதரர்கள் ஏதோ ஒரு வகையில் ஜெயித்து விட்டனர்.

# தீவிரமான பயிற்சியில் இலங்கை அணி

உலகக் கிண்ண கிறிக்கெற் போட்டியில் பங்கு பற்றுவதற்காக சென்ற இலங்கை அணி இன்று சிம்பாவேயில் தனது முதலாவது பயிற்சிப் போட்டியில் விளையாடவுள்ளது.

இரண்டு பயிற்சிப் போட்டிகளில் விளையாடவுள்ள இலங்கை அணி முதலாவது போட்டி கிறிஸ்லண்ட் அணியுடனும், இரண்டாவது போட்டி சுவிஸ்ரெட் அணியுடனும் ஆடவுள்ளது.

பயிற்சிப் போட்டிகளில் இலங்கை அணியின் சுழல்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் கலந்து கொள்ள மாட்டார் என இலங்கை அணியின் முகாமையாளர் தெரிவித்துள்ளார். அவரின் உடல் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டே அவர் பயிற்சிப் போட்டிகளில் விளையாடமாட்டார்.

இதேவேளை இலங்கை அணி வீரர்கள் நேற்று இரண்டு மணித்தியாலங்கள் திம்போலில் பயிற்சிகளில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## அணி வீரர்கள் விபரம்

### இலங்கை

| | |
|---|---|
| சனத் ஜெயசூரியா (அணித்தலைவர்) | அவிஸ்கா குணவர்த்தன |
| மார்வன் அத்தப்பத்து | ஹசன் திலகரட்ன |
| மஹேல ஜெயவர்த்தன | முத்தையா முரளிதரன் |
| குமார் சங்ககார | சமிந்த வாஸ் |
| அரவிந்த டி சில்வா | தில்ஹார பெர்னான்டோ |
| ரசல் ஆனோல்ட் | புலஸ்தி குணரட்ணே |
| ஜிஹான் முபா | பிரபாட் நிசாங்க |
| | புட்திகா பெர்னான்டோ |

# உலகக்கிண்ணப் போட்டியில் புள்ளியிடும் அமைப்பு முறை

2003ல் தென்னாபிரிக்காவில் நடைபெறவிருக்கும் உலகக் கிண்ணக் கிறிக்கெற் போட்டியில் நடைமுறைப்படுத்தப்படும் புள்ளி முறை பற்றி சர்வதேச கிறிக்கெற் சபை (I.C.C) தெளிவான விபரத்தை வெளியிட்டுள்ளது.

சுப்பர் சிக்ஸ் மட்டத்தில் புள்ளிகள் வழங்கும் முறை பின்வருமாறு அமையும்; ஒவ்வொரு குழு நிலையிலும் வெற்றி பெறும் அணிக்கு 4 புள்ளிகளும், சமநிலையில் முடிவடையும் ஆட்டங்களுக்கு அல்லது முடிவுறாத ஆட்டங்களுக்கு 2 புள்ளிகளும் வழங்கப்படும். ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் முதல் மூன்று இடங்களைப் பெறும் அணிகள் சுப்பர் சிக்ஸ் மட்டத்திற்கு முன்னேறும். குழுப் போட்டியில் பெறும் புள்ளிகளுக்கமைய அந்த 6 அணிகளும் பின்வரும் முறையில் முன்னிலைப்படுத்தப்படும்.

1. தகுதிபெற்ற மற்றைய அணிகளுக்கு எதிராக 4 புள்ளிகள் வெற்றிக்கும், சமநிலையில் அல்லது முடிவுறாத ஆட்டங்களுக்கு 2 புள்ளிகளும் வழங்கப்படும்.
2. தகுதி பெறாத அணிகளுக்கெதிராக வெற்றிக்கு 1 புள்ளியும், சமநிலையில் அல்லது முடிவுறாத ஆட்டங்களுக்கு 1/2 புள்ளியும் வழங்கப்படும்.

1999ல் உலகக் கிண்ணப் போட்டியின் விதிகளிலிருந்து 2003ம் ஆண்டிற்கான விதிமுறைகள் மீளமைக்கப்பட்டுள்ளது. 1999ல் தகுதி பெற்ற அணிகளுக்கெதிராக 2 புள்ளிகள் மட்டும் பெற்றால் போதுமானது. ஆனால் தகுதி பெறாத அணிகளுக்கெதிராக எந்தவித புள்ளியும் பெறவேண்டிய அவசியம் இல்லை. இந்தப் புதிய முறை எல்லாக் கழக அங்கத்துவ சபையுடனும் கலந்துரையாடப்பட்ட பின்பே நடைமுறைப்படுத்தப்படுகிறது. இயலுமான வரை ''சுப்பர் சிக்ஸ்'' மட்டத்தில் போட்டியைத் திறந்த போட்டியாக்குவதே நோக்கமாகும். குழு மட்டப் போட்டியில் உயர்ந்த புள்ளி எண்ணிக்கையை பெறுவதனால் ''சுப்பர் சிக்ஸ்'' மட்டத்தில் இடம் பெறும் இறந்த (Dead) ஆட்டங்களை திருப்தியான முறையில் குறைப்பதற்காகவே இம் முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது.


குழு மட்டப் போட்டியிலும் சுப்பர் சிக்ஸ் போட்டியிலும் அணிகள் சமபுள்ளிகளைப் பெற்றால் ஒரு அணி தெரிவுசெய்யப்பட்ட பல அளவீட்டு முறைகள் தெரிவு செய்யப்படுகின்றன. அவையாவன,

1. குழுப் போட்டிகளில் உச்ச வெற்றி பெறும் அணி
2. புள்ளிகளினாலும், வெற்றிகளாலும் சம நிலையில் காணப்படின் அணிகளுக்கிடையிலான போட்டியில் வெற்றி பெற்றவரால் தீர்மானிக்கப்படும் (அதாவது வெற்றி பெற்ற அணியினாலேயே அணிகளின் சமநிலை (Draw) தீர்மானிக்கப்படும். இரண்டுக்கு மேற்பட்ட அணிகள் சமபுள்ளிகளைப் பெற்றிருந்தால், கூடுதலான ஆட்டங்களில் பங்கு பற்றிய அணி தெரிவு செய்யப்படும்.)
3. இதற்குப் பின்பும் சம நிலையில் இருந்தால், கூடுதலான ஓட்ட எண்ணிக்கை பெற்ற அணி தெரிவு செய்யப்படும்.
4. இதன் பின்பும் சம நிலையில் இருப்பின் குழு ஆட்டங்களில் வீசப்பட்ட பந்துகளுக்கு கூடுதலாக விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய அணி தெரிவுசெய்யப்படும்.
5. நிகழ்தகவு அல்லாத அதாவது அந்த அளவீடுகளின் படி தீர்ப்பிட முடியாத பட்சத்தில் அணிகளை பிரித்தெடுக்க குலுக்கல் முறை பயன்படும்.

(இ-55)

உலகக் கிண்ண கிறிக்கெற் போட்டிகள் நடைபெறவுள்ள விளையாட்டரங்குகள் சில


ஹராரே ஸ்போர்ட்ஸ் க்ளப், ஹராரே


பஃபல்லோ பார்க், ஈஸ்ட் லண்டன்


புனித ஜார்ஜ் பூங்கா, போர்ட் எலிசபட்


குட்இயர் பார்க், ப்ளூம்ஃபோன் டேன்

### முரண்பாடுகள் ஏற்பட்டாலும்

# நிரந்தர சமாதானத்தில் அரசும் புலிகளும் உறுதியாக உள்ளனர்

## நோர்வே தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான பேச்சுவார்த்தையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது. சில முரண்பாடுகள் ஏற்பட்டாலும் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதில் இரு தரப்பினரும் உறுதியாகவுள்ளனர் என்று இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேக் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வாழ் தமிழர் பணிக் குழுவின் தலைவர் என்.விஜயசிங்கத்துடனான சந்திப்பின் போதே மேற்படி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசும் விடுதலைப்புலிகளும் இதய சுத்தியோடு சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றனர் என்று குறிப்பிட்டார்.

என்.விஜயசிங்கம் தென்னிலங்கை நிலை பற்றிகருத்தை ஜோன் வெஸ்பேக்கிடம் வெளியிடுகையில்,

ஜனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தையில் அக்கறை செலுத்தவில்லை. பிரதமரின் சமாதான முயற்சியை எந்த வகையிலாவது குழப்பிவிட வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளார்.

சமாதான முயற்சிகள் வெற்றியடைந்தால் பிரதமருக்கு நல்ல பெயர் வந்துவிடும். அது தனக்கு கிடைக்காதே என்ற கவலையும் அவருக்கு உண்டு.

விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் பட்டியலில் இணைத்துக் கொண்ட அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் கூட இன்று புலிகளை அங்கீ



கரித்துப் பேசுகின்றன. புலிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து வருகின்றன.

இந்நிலையில், ஜனாதிபதி மட்டும் புலிகளை பயங்கரவாதிகளாக காட்டி வருகிறார் என்று தெரிவித்தார். (உ-3)

# அரசியல் கைதிகள் விரைவில் விடுதலை

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் அடுத்த ஒரு மாத காலத்திற்குள் விடுதலை செய்யப்படுவர் என நீதி அமைச்சர் வி.ஐ.மு.லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.

தமது வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்த வேண்டும் அல்லது தம்மை தத்தமது பகுதிச் சிறைச்சாலைகளுக்கு மாற்றவேண்டும் எனக் கோரி களுத்துறைச் சிறைச்சாலைக் கைதிகள் அனைவரும் மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளனர். கைதிகளின் இவ் அறிவிப்பைத் தொடர்ந்தே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கைதிகளின் விடுதலை குறித்து அமைச்சர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அமைச்சர் மிலிந்த மொறகொடவினால் நியமிக்கப்பட்ட குழுவினர் கைதிகளின் வழக்குகள் பற்றிய விபரங்களை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பித்துள்ளனர்.

இவ்வழக்கு சம்பந்தமான விசாரணைகளை சட்டமா அதிபர் திணைக்களம் மேற்கொண்டதும் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் கட்டம் கட்டமாக கைதிகள் விடுதலை செய்யப்பட்டு வருகின்றனர்.

இவர்களின் விடுதலை குறித்து தமிழ்க் கட்சி கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான கே.சிவாஜிலிங்கம், அ.விநாயகமூர்த்தி ஆகியோர் தன்னிடம் வலியுறுத்தியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

# ஒரு இலட்சத்து 65 ஆயிரம் வெடிப் பொருட்கள் அழிப்பு

(கொழும்பு)

மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இதுவரை ஒரு லட்சத்து 65 ஆயிரம் வெடிபொருட்களை அகற்றி அழித்துள்ளனர்.

இவற்றில் 94 ஆயிரத்து 500 மிதிவெடிகளும், 17 ஆயிரம் ஏனைய வெடிபொருட்களும் அடங்கும்.

இதுவரை 41 மில்லியன் சதுர மீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகவும், ஆயிரத்து 400 மில்லியன் சதுர மீற்றர் பரப்பளவில் வெடிப்பொருட்கள் அகற்றப்படவுள்ளதாகவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கண்ணிவெடி ஒழிப்புக்கு ஒட்டாவா உடன்படிக்கையில் ஸ்ரீலங்கா அரசு கையெழுத்திட வேண்டும் என உலக கண்ணிவெடி ஒழிப்பு இயக்கம் கேட்டுள்ளதுடன் விடுதலைப் புலிகளையும் இவ் உடன்படிக் கையில் கையெழுத்திட வைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

ஒட்டாவா உடன்படிக்கையில் இதுவரை 148 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

இதேவேளை, வடபகுதி கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிடம் கண்ணி வெடி அகற்றும் பணிகளுக்கு மேலதிக உதவிகளை கோரவுள்ளதாகவும் உலக கண்ணிவெடி ஒழிப்பு இயக்கம் தெரிவித்துள்ளது. (உ-3)

# செயற்குழு தெரிவு

(உடுவில்)

இலங்கை ஆசிரியர் சங்க தென்மராட்சி கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் செயற்குழுத் தெரிவும் கடந்த 26ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

இவ்வாண்டிற்கான ;புதிய செயற்குழுவில் ந.புகன்ஸ்ரீஇந்திரன் தலைவராகவும், க.தம்பிமுத்து செயலாளராகவும், திருமதி கே.ஏகாம்பரநாதன் பொருளாளராகவும் நிர்வாக உறுப்பினர்களாக க.நித்தி யானந்தன், பு.நகுலேஸ்வரன், வை.சசிகரன், ந.மகேந்திரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-261)



யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான கருத்தரங்கை மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப.திலகநாயகம் போல் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைக்கிறார்.

# உலக வங்கி நிதியுதவியுடன்

## அரச சேவை புனரமைப்பு

(கொழும்பு)

அரசாங்க சேவையை புனரமைப்புச செய்வதற்கு உலக வங்கி 200 கோடி ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

அரசாங்க சேவைகளை புனரமைப்புச் செய்வதற்கான அங்கீகாரத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வழங்கியுள்ளதாக பொது நிர்வாக முகாமைத்துவ அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க சேவைகளைப் புனரமைப்புச் செய்வதற்கும், மற்றும அரசாங்க சேவையில் சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்பான பரிந்துரைகளைச் செய்வதற்கும் கட்சி சார்பற்ற ஆணைக்குழுவொன்றும் அமைக்கப்படவுள்ளது. (உ-8)

# தைப்பொங்கல் தின கட்டுரைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையால் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு, நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**கனிஷ்ட பிரிவு**

முதலாம் இடம்:-க.ஜஸ்மிலா-வேம்படி மளிர் கல்லூரி,இராண்டாம் இடம்:-க.உஷாந்தன்- யாழ்.இந்து கல்லூரி,மூன்றாம் இடம்:-ப.நிமாலினி-யாழ். மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை,

**மத்திய பிரிவு**

முதலாம் இடம்:-நா.ஸ்ரீவள்ளி-யாழ்.இணுவில் இந்துக் கல்லூரி, இராண்டாம் இடம்-செ.ஜெனார்த்திகா-மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை,மூன்றாம் இடம்-யோ.மஞ்சு-யாழ்.வீமன்காமம் மத்திய மாகா வித்தியாலயம்,

**சிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம்:-சு.ஜெயவதனி-யாழ்.உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம், இராண்டாம் இடம்-த.தர்சினி- யாழ்.உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்,மூன்றாம் இடம்:-வ.சிவலோஜினி -யாழ்.இணுவில் இநதுக் கல்லூரி. (உ)





நிகழ்வில் கலந்து கொண்ட மிலேனியம் மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான மிலேனியம் கல்வி நிலைய பொறுப்பாளர் ரட்ணராஜா உரையாற்றுகிறார்.

லயன் திருமதி சிவகுமாரன், யாழ் மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்விழி ஆகியோர் மேடையில் அமர்ந்திருக்கின்றனர்.

# பிரான்ஸ் உதவி அமைச்சர் செவ்வாயன்று யாழ்.வருகின்றார்

(திருநெல்வேலி)

பிரான்ஸ் நாட்டு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ரெனோல்ட் முசோலியன் தலைமையிலான வெளிநாட்டு அமைச்சர்கள் குழு எதிர்வரும் 11 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது.

அரச அதிபர் தலைமையில் அன்றைய தினம் மதியம் 12 மணிக்கு செயலகத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் இக்குழு பங்கேற்கவுள்ளது.

இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசசார்பற்ற இணைய பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பின்னர், பி.ப. 3.00 மணிக்கு பத்திரிகையாளர்களைஇக்குழு பஸ்ரியான் ஹொட்டலில் சந்திக்கவுள்ளது.

இச்சந்திப்பில் குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அமைதி நிலை தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது. (உ-43)

## மேலும் 61 ...

முகாமைத்துவம்-ரி.விஜிதா,பி.சாமந்தி,ரி.தில்லைநாயகர்,ரி.சுஜிதா, கே.சனாநந்தன்,பி.கதிர்காமத்தம்பி, எஸ்.மதிவதனி,எஸ்.ஜெயகரன், எஸ்.ஜெயதிலகம்,எ.ராதாகிருஷ்ணன், எம்.ரிரோன்,வி.நிரூபன்,கே.அனுஷாந்தன்,எஸ்.கஜன்.

வர்த்தகம்-எஸ்.பிரபாலினி,எஸ்.சுகந்தா,கே.லதிகா,ரி.பவநீதன்,பி.ராஜேஸ்வரன்,ரி.முகுந்தன்,எஸ்.தர்மினி,கே.கிருபாகரன்,ரி.சதீசன்,கே.சனந்தி,என்.கஜிந்தா, ஆர்.ரட்ணராஜ்,பி.ஜீவன்.

மேற்படி கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் ஏற்கனவே ஆரம்பமாகியிருப்பதால்,மேற் குறிப்பிட்டவர்கள், உடனடியாக தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு பதிவாளர் அறிவித்துள்ளார். (உ-3,8)

# கலாசார அமைச்சர்கள் சட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

சார்க் நாடுகள் அமைப்பின் கலாசார அமைச்சர்களின் கூட்டம் நேற்றுக் கொழும்பில் ஆரம்பமானது.

ஒபரேய் ஹோட்டலில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் நேற்று ஆரம்பமான இக்கூட்டம் தொடர்ந்து நாளைவரை நடைபெறவுள்ளது.

சார்க் நாடுகளின் கலாசார நிலையம் ஒன்றை இலங்கையில் அமைப்பது, ஏனைய கலாசார விவகாரங்கள் தொடர்பாகவும், பாரமபரிய மரபு சார்ந்த கலைகளைப் பேணுவது ஆகியன இக் கூட்டத்தில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன. (உ-8)



நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் ஒரு பகுதியினர்.

## இன்று ஒரு தகவல்

### எழுத்துச் சாத்திரம்

ஒருவன் எழுதுகிற எழுத்தைப் பாத்து விட்டு, அந்த அந்த ஆள் எப்படிப்பட்டவனாக இருப்பான் என்பதை யூகிக்க முடியுமா? 'முடியும் என்று சொல்லுகிறார்கள் சிலர் அதுதான் எழுத்துச் சாத்திரம் (Sraphology) இப்பொழுதும் மேல் நாடுகளில் சில பத்திரிகை விளம் பரங்களைப் பார்த்தால், 'இந்த வேலைக்கு விண்ணப்பம் போடுகிறவர் கள் தங்களுடைய சொந்தக் கையெழுத்திலே மனுவை எழுதி அனுப்ப வேண்டி' இருக்குமாம். இது எதற்கென்று நினைக்கிறீர்கள்? பல பெரிய கம்பனிக ளுக்கு எழுத்து சாத்திரத்தில் நம்பிக்கை இருப்பது தான் இதற்குக் காரணமாம்.

இன்று லண்டனில் உள்ள பல பெரிய கம்பனிகள் வேலைக்கு ஆள் எடுப்பதற்கு முன்னர், எழுத்து சாத்திர நிபுணர்களை அழைத்து மனு தாரர்க ளுடைய கையெழுத்தைக் காட்டுவது உண்டாம். எழுத்துக்கு மதிப் பெண் போடச் சொல்லுவார்களாம். நிறைய விண்ணப்பங்கள் வருகிற பொழுது அதை வடிகட்டுவதற்கும் இந்த முறையை உபயோகப் படுத்துவது உண்டாம். பிரிட்டன். பிரான்ஸ், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, செக்கோஸ்லாவாக்கியா, இஸ்ரேல் இங்கெல்லாம் இந்தக் கலையிலே தேர்ச்சி பெற்ற நிபுணர்களுக்கு ஏகப்பட்ட கிராக்கியாம். அவர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கிற தாம். ஓர் ஊழியர் நேர்மையானவரா? இல்லையா? பணம் புழங்குகிற இடத் திலே அவருக்கு வேலை கொடுக் கலாமா? கூடாதா? விசுவாசமான ஊழியரா? பொய் சொல்லுவாரா? என்பதையெல்லாம் எழுத்தைப் பார்த்துமுடிவு பண்ணிக்கொள் கிறார்களாம்.

இத்தாலியிலே17 வது நூற்றாண்டிலே இந்தக்கலை ஆரம்பமாகி ருக்கிறது. 1871 வரையும் இது ஒன்றும் அவ்வளவாகப் பிரபலமாக ல்லையாம். பிரெஞ்சுப் பாதிரியார் 'ஹிபோலைட்மிஷாந் 1871ல் ரெஞ்சு எழுத்துச் சாத்திர சங்கத்தை நிறுவினாராம். அதன் பின்னர் ஞ்சம் கொஞ்சமாக பரவ ஆரம்பித்திருக்கிறது. இன்று உலகத்தி யே மிகப் பெரிய எழுத்துக்கலைக் கழகம் (Graphologyinstitute) ஸ்ரேலில் ரெல் அவிவ் நகரத்திலே இருக்கிறது. அதன்கிளை லண்டனில் ருக்கிறதாம்.

இஸ்ரேலில் சில சமயம் நீதி மன்றங்களில் கூட எழுத்துச் சாத்திர புணர்களின் அறிக்கையை ஏற்றுக் கொள்கிறார்களாம் குற்றவாளிகள் உண்மையிலேயே குற்றம் இழைக்கக் கூடியவர்கள் தானா? என்பதை அவர் எழுதிய எழுத்தின் வடிவத்தை வைத்துக் கண்டு பிடித்து விடுகிறார் களாம். எழுத்துச்சாத்திரம் சம்பந்தமாக கடந்த 200 ஆண்டுகளில் ஏராளமான நூல்கள் வந்திருக்கின்றனவாம். சில பல் கலைக்கழகங் களில் இதைப் பாடமாகக் கூட வைத்திருக்கிறார்களாம். இந்தக் கலையை நூற்றுக்கு நூறு துல்லியமானது என்று சொல்ல முடியாது. இதை விஞ்ஞான ரீதியிலே நிரூபிக்க முறை யான ஆராய்ச்சிகள் எதுவும் நடத்தப்படவில்லை. ஆனாலும் ஒருவர் எழுதுகிற எழுத்தின் வடிவத்தை வைத்து அவருடைய மன நிலையை ஓரளவுக்குப் புரிந்துகொள்ள முடியும் என்பது உண்மை. உளவியல் நிபுணர்கள் இதை ஒப்புக்கொள் கிறார்கள். ஒருவருடைய ஆளுமையை அறிவதற்கு இது பெரிதும் உதவு கிறது. கோடு போடாத வெள்ளைத்தாளில் ஒரு போல்ட்பொயின்ற் பேனா வினால் ஓர் இருபது வரிகள் எழுதிக் கொடுத்தால் போதும், நீங்கள் எப்படிப்பட்டவர்கள் என்று சொல்கிற நிபுணர்கள் பலர் இருக்கிறார்கள்! ஆங்கில எழுத்துக்களை அடிப்படையாக வைத்து விளக்கம் கொடுக்கிறார் களாம். இருந்தாலும் பிற மொழிகளில் எழுதுகிறவர்களின் குணநலன் களைக் கண்டு பிடிப்பதற்குப் பொதுவான விதி முறைகள் இருக்கின் றனவாம்.

ஒருவர் பெரிதாக இடைவெளி விட்டு எழுதினால் அவர் பரந்த நோக்கம் உள்ளவர். சிறிதாக நெருக்கமாக எழுதினால் ஒழுக்கமும் கட்டுப்பாடும் உள்ளவர். ஒரு தாளில் இருபக்கமும் இடைவெளி விட்டு எழுதுகிறவர்கள் கலை நோக்கம் உள்ளவர்களாகவும், எதிலும் பட்டும் படாமலும் இருக்கிற சுபாவம் உள்ளவர்களாகவும் இருப்பார்களாம். ஆங்கில எழுத்துக்களிலே i, t, f போன்ற எழுத்துக்களை அளவுக்கு அதிகமாக மேற்புறம் நீட்டி எழுதுகிறவர்கள் குறிக்கோள் உள்ள வர்களாம். g, y, p போன்ற எழுத்துக்களை அளவுக்கு அதிகமாக கீழ் நோக்கி எழுதுகிறவர்கள் பாலியலில் (sex) அதிக ஆர்வமுள்ளவர்கள். குறைவான இடைவெளிவிட்டு எழுதுகிறவர்கள் சிக்கனமான பேர்வழிகள் இஸ்ரேலில் எழுத்துக்களைக் கழகத்தின் தலைவர் அன்னாகொரன் இவற்றைச் சொல்கிறார். ஆகக் கூடி நமது கையெழுத்தே நம்மைக் காட்டிக் கொடுத்து விடும்போல இருக்கிறது.

அது இருக்கட்டும். சில டாக்டர்கள் மருந்துச் சீட்டு எழுதிக் கொடுக் கிறார்களே அதை உங்களால் படிக்க முடியுமா? அதைப் படிப்பதற்குத் தனிச் சாமர்த்தியம் வேண்டும். சிலரால் தான் அது முடியும். அவர் எழுதிக் கொடுக்கிற சீட்டை கம்பவுண்டரிடம் கொண்டு போய்க் கொடுங்கள். அவர் அதைச் சரியாகப் படித்துப் புரிந்து கொண்டு போத்தலில் மருந்து கலந்து கொடுத்து விடுவார். அந்த எழுத்து நமக்குப் புரியாது.

ஓர் ஆள் கையில் ஒருவிலாச் சீட்டைவைத்துக் கொண்டு வீடு எங்கேயிருக்கிறது என்று விலாசம் தேடிக் கொண்டிருந்தார். அந்தச் சீட்டில் விலாசம் எழுதிக் கொடுத்தவர் ஏதோ அவசரத்தில் கிறுக்கிக் கொடுத்திருக்கிறார். ஒன்றும் புரியவில்லை. வழியிலே போகிறவர்களிடம் சீட்டைக் காட்டி விசாரிக்கிறார். வாங்கிப் பார்க்கிறவர்கள் எல்லாரும் எழுத்துப் புரியாமல் போய் விடுகிறார்கள்.

இந்த ஆள் யோசித்தார். அங்கும் இங்கும் பார்த்தார். ஒரு சிறிய ஆஸ்பத்திரி கண்ணில் பட்டது. புத்திசாலித்தனமாக நேரே அங்கு போனார். மருந்துக் கலவையாளரைக் (கம்பவுண்டரை) கண்டு பிடித்தார். டாக்டரின் எழுத்தையே புரிந்து கொள்கிறவராயிற்றே அவர். அதனாலே அவரின் கையிலே சீட்டைக் கொடுத்தார். அவர் சீட்டை வாங்கி அப்படியும், இப்படியும் திருப்பி உற்றுப்பார்த்தார். அதன் பின்னர் இவரைப்பார்த்துப் 'போத்தல் கொண்டு வந்திருக்கிறீர்களா?' என்றாராம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மகிந்த ராஜபக்ஷ இந்திய பிரதமரைச் சந்தித்துப்பேச்சு

(கொழும்பு)



எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ, நேற்று முன்தினம் இந்தியாவுக்கு 6நாள் தீடீர் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாஜ், வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங்ஹ, பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோரை நேற்று முன்தினம் இரவு சந்தித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது, அரசின் சமாதான முயற்சிகள், அதிஉயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக் குடியமர்த்துவது, இந்திய இராணுவத தளபதி சதீஸ் நம்பியாரின் அறிக்கை, விடுதலைப் புலிகள் சர்வதேச சிறுவர் பாதுகாப்புக் சட்டங்களுக்கு முரணான வகையில் சிறுவர்களைத் தமது இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளுதல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அத்துடன், இவ்விடயங்கள் தொடர்பாகவும். அதி உயர் பாதுகாப்பு வலயங்கள்குறித்தும் இந்தியப்பாதுகாப்பு நிபுணர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிப் பீடம் ஏறியபின்னர் எதிர்க்கட்சித



தலவர் மேற்கொள்ளும் முதலாவது இந்தியப் பயணம் இதுவாகும்.

இந்திய அரசாங்கத்தின் விசேட அழைப்பின் பேரில் மகிந்த ராஜபக்ஷ இத்திடீர் விஜயத்தை மேற்கொண்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## அரச மரமுள்ள இடமெங்கும் பௌத்த ஆலயம் அமைப்பது அப்பட்டமான மனித உரிமை மீறல்

### வலி.தெற்கு பொது அமைப்புகள் கண்டனம்

(ஏழாலை)

நாங்கள் புத்தமதத்திற்கு விரோதிகள் அல்லர். யாழ்ப்பாணத்தில் புத்த விகாரையும் நயினாதீவில் நாகவிகாரையும் அமைந்துள்ளது.

அது தொடர்பாக நாம் எந்த விதமான பிழையான கருத்துக் களையுளும் கூறவில்லை, கூறப் போவதுமில்லை.

ஆனால,அரச மரம் நிற்கும் இடமெல்லாம் புத்த பகவான் இருந்த இடம் என்று அங்கே அவரின் சிலையை வைத்து அதனைக் காலம் காலமாகவுள்ள வழிபாட்டுத் தலமாகக் காட்ட முனைவது தான் எம்மையும் எமது சமயத்தையும் அவமதிக்கும் செயலாக அமைந்துள்ளது. இதுமட்டும்மல்ல அதன் அருகில் இராணுவமுகாமை அமைத்து இருப்பது புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முரணான நடவடிக்கையாக அமைந்துள்ளது. இந்த நடவடிக்கைகள் காரணமாக எமது மக்கள் மனதில் அரசின் மீது அவநம்பிக்கையையும், அச்சம் கலந்த பயஉணர்வும் ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டில் புதிது புதிதாக விகாரைகள்அமைக்கப்படுவதைக் கண்டித்து வலி -தெற்கு பொது அமைப்புக்களின ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அச் செய்திக்குறிப்பில் மேலும், தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும், ஸ்ரீ லாங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும்இடையில் எழுதப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட முக்கியமான விடயமான மக்களின் இயல்பு வாழ்க்கை என்ற விடயம் எமது பிரதேசத்தில் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை.

மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி அடிப்படை வசதிகள் அற்ற வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கும் இவ் வேளையில், அவர்களின் மனதில் மிகுந்த வேதனை ஏற்படுத்தும் முகமாக கந்தரோடைப் பகுதியில் புதைபொருள் ஆராட்சி நிலைய காணியில் ஓர் புத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இந்த இடம் உண்மையில் யாருக்கு எந்த மதத்தினைச் சார்ந்தவர்களுக்குச் சொந்தமென ஆராட்சியின் முடிவு எட்டப்பட முன்னா இப்படியான விகாரை ஒன்றினை புதிதாக அமைத்து இருப்பது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மட்டுமல்ல ஸ்ரீலாங்காவின் நிர்வாகத்தை அவமதிக்கும் செயலாக அமைந்துள்ளது.

ஒரு பிரதேசத்தில் ஒரு வழிபாட்டுத்தலம் அமைப்பதாக இருந்தால் அப்பகுதி பிரதேச செயலரிடமோ அன்றி அரச அதிபரிடமோ அனுமதி பெறவேண்டும். இந்த விகாரை அமைக்கும் விடயத்தில் அதுகூடக் கடைப்பிடிக்கப்படவில்லை, என்பதோடு இதே போன்ற பல விகாரைகள் யாழ் குடாநாட்டின் பல கிராமங்களில் புதிது புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

அரசமரம் நிற்கும இடமெல்லாம் புத்தரின் சிலை வைக்கப்பட்டு வழிபாட்டுத்தலமாக்கப்பட்டுள்ளது. தென்னிலங்கையில் இருந்து வடபகுதி நோக்கி வரும் சிங்கள மக்கள் இவ்விகாரைக்குச் சென்று வருவதையும் அவதானிகக் கூடியதாக இருக்கின்றது. இது ஒரு அப்பட்டமான மனித உரிமை மீறல் நடவடிக்கையாகும் என்றுள்ளது. (உ-12)

## இராசி பலன்

**04. 02. 2003**

**(தை 28, செவ்வாய்)**

| | |
|---|---|
| திருதியை | மு.இ 6.58வரை |
| பூரட்டாதி | பி.இ 6.31வரை |
| இராகுகாலம் | 3.35-5.05 |
| சுபநேரம் | 11.05 - 12.35 |

**மேடம்**
தனலாபம், நண்பர்கள் உதவி, தடைப்பட்டகாரியம் கைகூடும், மனமகிழ்ச்சி!

**இடபம்**
அதிகாரம், நிலைமாற்றம், பிறர் உதவி வீண் பயம்.

**மிதுனம்**
உடல்உபாதை, கட்டுப்பாடு, துக்கம் ஸ்திரிவியாதி.

**கடகம்**
வாகனபயம், விரோதம், ரோகம், எடுத்த கருமங்கள் தாமதமாகும்.

**சிங்கம்**
நினைத்தகாரியம்கைகூடும், கௌரவம், தேகநலன்,தனலாபம்.

**கன்னி**
இனசனத் தொடர்பு, தீடீர் பயணம், தொழில்முன்னேற்றம், தேகநலன்.

**துலாம்**
மனச்சோர்வு, திடீர் நன்மை, வியாபாரச்சிறப்பு, காரிய இடையூறு.

**விருச்சிகம்**
குடும்பசுகம், மனச்சஞ்சலம், தந்தை வழி நன்மை, ரோகபயம்.

**தனுசு**
இனியஅனுபவம், காரிய அனுகூலம், தனவரவு, வாக்கு மேன்மை.

**மகரம்**
கருமங்கள் தாமதமாகும், பொருள் விரயம், போசன சுகம், மாதர் நட்பு.

**கும்பம்**
தேகநலன், விருந்துபசாரம், செல்வாக்கு, கற்பனைமிகுதி.

**மீனம்**
நன்மை விருத்தி, கோபப்படுதல், பண விரயம்,பிரயாணம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

## தகுதிகாண் ஆசிரியர் நியமனம்

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

(உடுவில்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில், க.பொ.த(உ/த) புள்ளியினடிப்படையில் தகுதிகாண் ஆசிரியர்களாக ஆயிரம் பேரை நியமிப்பதற்கு அனுமதி கிடைத்தமையை அடுத்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக கடமையாற்றும் அனைவரையும்இதற்கு விண்ணப்பிக்கும் படியும். தனித்தனியாக அவர்களின் சொந்த முகவரிக்கு அறிவுறுத்தல்களை அனுப்பி வைக்குமாறும் வலயக் கல்விப்பணிப்பாளர்களை வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சு செயலாளர் ஆர்.தியாகலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன், அவர்களின் பெயர் கற்பிற்கும் பாடசாலை, சொந்த முகவரி போன்ற விபரங்களை உடன் தனக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுக கொண்டுள்ளார்.

தகுதிகாண் ஆசிரியர்களை நியமிப்பதற்கான விளம்பரங்கள், கல்விச்சேவைக் குழுவினால் பத்திரிகைகளில் விரைவில் விளம்பரம் செய்யப்படவுள்ளன. (உ-261)

## மதமாற்ற தடைச்சட்ட விவகாரம்!

# அமைச்சர் மகேஸ்வரனுக்கு எதிராக முகத்துவாரத்தில் ஆர்ப்பாட்டம்

## இந்து மதத்தை இழிவுபடுத்தும் கோஷங்களும் எழுப்பப்பட்டனவாம்

(கொழும்பு)

**மதமாற்றத்திற்கு மக்கள் தூண்டப் படுவதை தடைசெய்ய வேண்டுமென்று இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் முன் வைத்த ஆலோசனைகளுக்கெதிராக 'ஜேசு ஜீவிக்கிறார்' என்னும் பிரிவினர் கொழும்பு முகத்துவாரம் பகுதியில் சுலோக அட்டைகள் ஏந்தி ஆர்ப்பாட்டம் செய்தனர்.**

அழுத்மாவத்தை வீதியில் நேற்று முன்தினம் மு.ப 11.30 வரை இந்த ஆர்ப்பாட்டம் தேவாலய முன்புறமாக இடம்பெற்றது.

அதில் ஒரு பிரிவினர் சமீபத்தி லுள்ள ஐயப்ப சுவாமி கோவில் வரை சென்று இந்து மதத்தவர்களை ஆத்திர மூட்டும் வகையிலான சுலோகங் களைத் தாங்கியிருந்ததுடன், அவ்வா றான கோஷங்களையும் எழுப்பினர்.

ஐயப்ப சுவாமியின் கோவில் தர்ம கர்த்தாக்களும், மாநகர சபை உறுப்பினர் குருசாமியும் இது பற்றி முகத்துவாரம் பொலிஸ் நிலை யத்தில் முறையிட்டுள்ளனர்.

இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் இதுபற்றி பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவிடம் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கும்படி கோரியுள்ளார்.

இத்தகைய செயல்களைக் கண்டித்துள்ள அகில இலங்கை இந்து மா மன்றம், அரசாங்கம் இது விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளது.

மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவரும் எம்.பி.யுமான மனோ கணேசன் முகத்துவாரம் பொலிஸா ருடன் தொடர்பு கொண்டு அப்பிர தேசத்தில் குழப்ப நிலை உருவா காமல் பார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்துக்கள் மட்டுமன்றி பௌத்த மக்களும் மதமாற்றத்திற்கு மக்கள் தூண்டப்படுவதை எதிர்த்து வருகின் றனர் என்று இந்து மா மன்ற அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)



## வடக்கு-கிழக்கில் கல்வி, தொழில் வழிகாட்டல் சேவைகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களிற்கென மூன்று நடமாடும் கல்வி, தொழில் வழிகாட்டல் சேவைகள் கடந்த மாதம் 31 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த நினைவு மண்டபத்தில் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் பயிற்சி அமைச்சர் கபீர் ஹாசீமால் அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட்டன.

இது தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சிகள் அதிகார சபையினால் நடைமுறைப்படுத் தப்படும் ஒரு செயற் திட்டமாகும்.

இத்திட்டத்திற்கென அதி நவீன வசதிகள், உபகரணங்கள் கொண்ட மூன்று நடமாடும் அலகுகளை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம்-கிளிநொச்சி-முல்லைத்தீவு என்பன ஒரு வலய மாகவும், மன்னார்-வவுனியா-திருகோண மலை என்பன இன்னொரு வலயமாகவும் மற்றும் மட்டக்களப்பு-அம்பாறை என்பன ஒரு வலயமாகவும பிரிக்கப்பட்டு இத்திட்டம் அமுல் செய்யப்படுகின்றது.

தொழில் வழிகாட்டல் மற்றும் அலோசனைகள் வழங்குவதற்கென விசேடமாகப் பயிற்றப்பட்ட 6 தமிழ் பட்டதாரி அலுவலர்கள் இதற்கென நியமிக்கப்பட்டுள்ளனர். இச்சேவையினுள பின்வருவன உள்ளடக்கப்பட்டுள்ளன.

*தொழில்கள், பயிற்சி வகுப்புக்கள், தொழிற் சந்தை, தொழிற் போக்குக்கள் என்பன பற்றிய தகவல்களின் இருப்பு.

*சுயவிபரக் கோவை எவ்வாறு தயாரித்தல், நேர்முகப் பரீட்சை களை எவ்வாறு எதிர்கொள்ளல், தமது தனிப்பட்ட இலக்குகளை எவ்வாறு நிர்ணயிப்பது போன்ற பயிற்சிகள் வழங்கல்.

*சுய திறன்கள், ஆற்றல்கள் ஆகியவற்றை வெளிக் கொணர்வதற் கான வழிகாட்டல் ஆலோசனைகள்.

இச்சேவையானது பாடசாலைகள், சமூக அபிவிருத்தி நிலையங்கள், மற்றும் பொது அமைப்புக்களி னூடாக நடாத்துவதெனத் தீர்மானிக் கப்பட்டுள்ளதால், இச்சேவையினைப் பெற விரும்புவோர் மேற்கூறிய அமைப்புக்களினூடாகவோ அல்லது கல்வி/தொழில் சம்பந் தமாகத் தனிப்பட்ட வழிகாட்டல் ஆலோசனைகளைப் பெற விரும் புவோர் நேரடியாகவோ இலக்கம் 7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள தேசிய பயிலுநர் மற்றும் கைத் தொழில் பயிற்சிகள் அதிகார சபை அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட தொழில் வழிகாட்டல் ஆலோசகர் கோ.கிருஸ்ணகுமார் தெரிவித்துள்ளார். (உ)

## பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலும் சமாதான முயற்சிகள் தொடரும்

(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட் டாலும் சமாதான முயற்சிகள் தொடரும் என அரசியல் வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமார துங்க பாராளுமன்றத்தை இவ் வருட நடுப்பகுதியில் கலைக்கவுள் ளதாக செய்தி வெளியானதை யடுத்தே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி பாராளுமன்றத் தைக் கலைக்கும் பட்சத்தில் அரசியல மைப்புச் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் திகதியை பிற்போடுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய அரசாங்கம் அமைக்கப்படும் வரை புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி புலிகள் போர் நிறுத்தத்தைக் கடைப பிடிப்பார்கள்.

ஆனால், பொது ஜன ஐக்கிய முன்னணித் தலைவியான ஜனாதி பதியின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தமாட்டார்கள் என்றும் மக்கள் ஆதரவைப் பெற்று பதவியேற்கும் அரசுடனேயே பேச்சுவார்த்தை நடத்துவார்கள் எனறும் மேலும் தெரியவந்துள்ளது. (உ-3)

## கடந்தவாரம் குடாநாட்டில் 8 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டனர்

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் 8 டெங்குக் காயச்சல் நோயா ளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து திருநெல்வேலி, கோண்டாவில், ஆனைக் கோட்டைப் பகுதிகளில் சுகாதாரத் திணைக்கள சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உடன் இணைந்துடெங்கு நோயைத் தடுப்பதற்கு மக்களின் பங்கு தொடர்பான தீவிர பிரசாரத்தை ஆரம்பித்துள்ளனர்.

நோயின் தாக்கம், பாதிப்பு தொடர்பாகவும் விளக்கமளிக்கப் படுவதுடன், மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டியதன் அவசியம் குறித்து ஆலோசனை கூறப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு பகுதியாக இன்று டெங்கு நோயின் அறிகுறிகள் பாதிப்பு தொடர் பான வீடியோ படக்காட்சி ஆனைக் கோட்டை உதயதாரகை சனசமூக நிலையத்தில இப்பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வழிகாட் டலுடன் இடம்பெறவுள்ளது. (உ-252)

## ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதாந்தம் வெளியிடப்படும் ஞானச்சுடர் மலரின் தைமாத இதழ் வெளிவந்துள்ளது. (உ-8)

## யுத்தத்தால் பாதிப்புற்ற

# சிறுவர் மேம்பாட்டுச் செயற்திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர் களின் எதிர்கால நலன் கருதி விரை வில் செயற்திட்டம் ஒன்று ஆரம்பிக் கப்படவுள்ளது.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில ஒஸ்லோவில் நடைபெற்ற மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்பட்டதற்கு அமைய, ஐக்கிய நாடுகள் சிறுவர் கல்வி நிதியம், தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான முக்கிய நிறுவனங்கள் இணைந்து இச் செயற்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளன.

இச்செயற்திட்டத்தின் கீழ், போர்ச் சூழல் காரணமாக விடுபட்டுச் சென்ற சிறுவர்களை பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களுடன் இணைப் பது, சிறுவர்களை பாடசாலைகளில் சேர்ப்பது, தொழிற்பயிற்சிகளை வழங்குவது, சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது, உளவியல ரீதியான சமூக ஒத்துழைப்பு என்பன செயற்படுத்தப்படவுள்ளன.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் ஓரிரு வாரங்களில் சிறுவர் அமைப்புக்களின் உறுப்பினர்கள் பங்கு பற்றும் செயலமர்வு ஒன்று நடைபெறவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சிறுவர் கல்வி நிதியம் தெரிவித்துள்ளது. (உ-8)

## சின்னக்கடை பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சின்னக்கடை சந்தையை சூழவுள்ள பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்குமாறு சம்பந்தப்பட்ட பகுதி வர்த்தகர்கள் யாழ். மின்சார சபை அத்தியட்சகரை கடித மூலம் கோரி யுள்ளனர்.

இவ்விடத்ததை விட்டு இராணுவம் சென்று 10 மாதங்கள் ஆகின்றன. இன்றுவரை இவ்வீதிக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை.

இங்கு உள்ள வர்த்தகர்கள் பல தடவை மின்சாரம் வழங்கு மாறு கோரியும் இன்னமும் அதற் கேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வில்லை.

இதனால், குருநகர் சந்தை மாலை வேளைகளில் சூனியப் பிரதே சமாக இருளடைந்து இருப்பதால், திருடர்கள் கைவரிசை அதிகமாகி வருவதுடன், மக்கள் நடமாட்டமும் குறைந்து வருகின்றது என்றும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (உ-10)

## சிறுவர் துஷ்பிரயோக கண்காணிப்புத் திட்டம்

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோ கங்களைக் கண்காணிக்கவென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகள் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, அதனைக் கட்டுப்படுத்தி சிறுவர் உரிமைகளை வலியுறுத்தும் வகையில், இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள் ளதாக ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## யாழ்.குடாநாட்டில் புதிய நீதிமன்றங்கள் அமைக்கப்படும்

### பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டிலுள்ள நீதிமன்றக் கட்டடங்கள் புனர் நிர்மாணம் செய்யப் படுவதுடன், புதிய நீதிமன்றக் கட்டடங்களும் அமைக்கப்படவுள்ளன என பிரதம நீதியரசர் சரத்என் சில்வா கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டிலுள்ள ஏனைய நீதிமன்றங் களைப் போலவே யாழ். குடாநாட்டு நீதிமன்றங்களும் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை, தற்போது இயங்கி வரும் நீதிமன்றங்களுக்கு தேவை யான வசதிகள் அனைத்தையும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

புதிதாக அமைக்கப்படவுள்ள நீதிமன றங்களுக்கு அருகில் ஒரு சில காரணங் களைக் கருத்தில் கொண்டு சிறைச் சாலைகள் எவையும் அமைக்கப்படக கூடாது எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கே.பால பட்டபெண்டி, நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பண்டார ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (உ-8)

## சமாதானமும், பொருளாதாரமும் ஒன்றாக ஏற்றம் பெற்று வருகின்றன!

# பொறுப்புள்ள தலைவர் இத்தருணத்தில் பொதுத் தேர்தலை விரும்பமாட்டார்

## ஜனாதிபதியின் அண்மைய அறிவிப்புக்கு பொருளியலாளர்கள் சாட்டையடி

(கொழும்பு)

**இன்றைய நிலையில் இன்னுமொரு பொதுத் தேர்தலின் விளைவு பொருளாதாரத்தை குழப்பத்திற்குள் தள்ளுவதாகவே இருக்கும். இன்றைய நெருக்கடியான கால கட்டத்தில் எந்தவொரு பொறுப்புள்ள தலைவரும் தேர்தலை நடத்த விரும்ப மாட்டார்.**

**கடந்த பொதுத்தேர்தலிற்கு முன்னைய காலத்தின் எதிர்மறையான பொருளாதார விலையில் இருந்து மீண்டு, ஒரு உறுதியான நிலை ஏற்பட்டு வரும் இந்நிலையில் தேர்தல் பொருளாதார தற்கொலையாகவே இருக்கும்.**

ஹற்றன் நாஷனல் வங்கி தலைவர் றின்ஸி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்த றின்ஸி,

சர்வதேசரீதியான பிரச்சினைகள் உருவாகிக் கொண்டுள்ள இக்காலத்தில் நாட்டின் முன்னேற்றத்தை மனதில் கொள்ளாத சில அரசியல்வாதிகளே தத்தமது கட்சி நலன்களுக்காக தேர்தலை விரும்புகின்றனர் என்றார்.

வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் மக்கி ஹாசிம் இது குறித்துத் தெரிவிக்கையில்,


இந்நேரத்தில் ஒரு பொதுத் தேர்தல் பொருளாதாரத்துறையில் குழப்பங்களுக்கு வழிவகுக்கும். தேர்தல் நடத்தும் செலவையும் சேர்த்தே வரியிறுப்பாளர் சுமக்க வேண்டியிருக்கும்.

உறுதியற்ற பொருளாதார நிலை வெளிநாட்டு முதலீட்டாளர்களைப் பின்வாங்கச் செய்யும் தேர்தல் பற்றிய பேச்சுக்கள் கிளம்பியதுமே பங்குச் சந்தை வீழ்ச்சியடைந்து வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

பிரபல அரசியல் ஆய்வாளரும், மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் பணிப்பாளருமான பாக்கிய சோதி சரவணமுத்து கருத்துத் தெரிவிக்கையில்,

இந்நேரத்தில் நடத்தப்படக்கூடிய ஒரு தேர்தல்,சமாதான செயற்பாடுகளின் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும், ஐ.தே.மு .அரசு பொருளாதார விடயத்தில் முன்னேற்றம் கண்டு வருகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

சர்வோதய தலைவர் ஏ.ரி.ஆரியரத்ன நாடு போரினால் நன்றாகவே பாதிக்கப்பட்டு விட்டது. இது அரசியல் விளையாட்டுகளுக்கு உரிய நேரமல்ல எனத் தெரிவித்துள்ளார். (உ)






நேற்று குருநகரில் திறந்து வைக்கப்பட்ட இலங்கை மின்சாரப் பொறுப்பீட்டுத் திணைக்கள யாழ். பிராந்திய அலுவலகத்தையும், இந்நிகழ்வில் கலந்து கொண்ட மின்சாரசபைப்பொறியியலாளர் வி.எஸ். சிவதாசன், கட்டட நிர்மாணத்திணைக்களப் பொறியியலாளர் சுந்தரகுமார், யாழ் மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப்பாளர் விஜிதரன்ஆகியோரையும் படங்களில் காணலாம். படங்கள்: க.பவன்

## அடுத்த தேர்தலை எதிர்கொள்ள தயாராகின்றன அரசியல் கட்சிகள்

(கொழும்பு)

ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு மீண்டும் ஒரு பொதுத் தேர்தலைப் பிரகடனப்படுத்துவார் எனவும், மாகாணசபைகளில் தனது அதிகாரங்களை நிலைநாட்ட மாகாண சபைத் தேர்தல்களைப் பிரகடனப் படுத்துவார் என்றும் அரசியல் வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் நாட்டில் மீண்டும் ஒரு தேர்தலைச் சந்திப்பதற்கு கட்சிகள் தயாராகி வருகின்றன.

இதேவேளை, எந்நேரமும் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு தயார் என ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் செனரத்கப்புக் கொட்டுவ தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு தயாராகும் குழு ஒன்றை பிரதமர் அமைச்சர் கருஜெயசூரிய தலைமையில் நியமித்துள்ளமை இங்கு நோக்கத்தக்கது.

இதேவேளை, மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் நடத்தப்படின் ஐக்கியதேசியக்கட்சி மேலதிகமாக 10 ஆசனங்களை வெல்லும் என அமைச்சர் எஸ்.பி திஸநாயக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி பெரும்பான்மை ஆசனங்களுடன் வெற்றி பெறும் என்றும் இதனால் சமாதானச் செயற்பாடுகள் பாதிக்கப்பட மாட்டாது. ஐக்கிய தேசியக் கட்சியை விட சிறந்தமுறையில்சமாதான செயற்பாடுகளை முன்னெடுப்போம் என்றார் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர.

இதேவேளை, எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் மாகாணசபைத் தேர்தல்களை நடத்த ஜனாதிபதி தீமானித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அதிகாரத்தில் இருக்கும் மாகாண சபை முக்கியஸ்தர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னரே இவ்வாறான தீர்மானத்தை ஜனாதிபதி எடுத்துள்ளார் என்று தெரியவந்துள்ளது. (உ-3)

## துரித பொருளாதார அபிவிருத்திக்கு நிரந்தர சமாதானம் அவசியம்

### பந்துல தெரிவிப்பு

(கொழும்பு)

துரிதமான பொருளாதார அபிவிருத்தி ஏற்படவேண்டுமாயின் நாட்டில் நிரந்தர சமாதானம் நிலவ வேண்டும் என பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பேருவளையில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ்வைபவத்தில் அமைச்சர் தொடர்ந்தும் பேசுகையில்,

எதிர்வரும் 300 நாள்களுக்குள் இலங்கையில் உறுதியான அபிவிருத்தியை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த அபிவிருத்தியின் உரிய பலனைப் பெறுவதற்கு நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். அத்துடன் அமெரிக்க, ஈராக் யுத்தம் தவிர்க்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

நாடு பாரிய பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளது. இந்நிலையில் இவ்வருடத்துக்கான வருடாந்த வருமானம் 300 பில்லியன் ரூபாவாகவும், செலவு 350 பில்லியன் ரூபாவாகவும் காணப்படும் என கணிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் மற்றும் வரித் தொகைகளான 268 பில்லியன் ரூபா திருப்பி செலுத்தப்பட வேண்டியுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## கொடியேற்றம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு கரமத்தை கந்தசாமியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 8ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. (உ-117)

## 176 மில்லியன் செலவில் சமுதாய மீளமைப்புத் திட்டங்கள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சமுதாய மீளமைப்பு திட்டத்தின் கீழ் இவ்வாண்டு ஆயிரத்து 176 மில்லியன் ரூபா செலவிலான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வடக்கு-கிழக்கின் சகல மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்புத் திட்டத்தின் பணிப்பாளர் இலங்கா நேசன் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்திற்கான நிதியினை வழங்க உலகவங்கி முன்வந்துள்ளது.

கல்வி, சுகாதாரம், நீர்விநியோகம்,விவசாயம்,நீர்ப்பாசன அபிவிருத்தி, மனிதவள அபிவிருத்தி வீடமைப்புத் திட்டங்களுக்கு இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

வேலைத்திட்டங்களை அமுலுக்கு கொண்டு வரும் வகையிலான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.(உ-8)

# சித்தமருத்துவர்கள் ஆங்கில மருந்து வழங்கத்தடை

## மாநகர சபையில் தீர்மானம்

(திருநெல்வேலி)

சித்த வைத்தியக் கல்லூரியிலிருந்து சித்த வைத்தியர்களாலும்,லங்கா ஆயுர்வேத கல்லூரியிலிருந்து வெளியேறும் சித்த வைத்தியர்களாலும் சித்த மருத்துவ மூலிகைகளை மட்டுமே தயாரிக்க முடியும். ஆனால் ஆங்கில மருந்துகள் தயாரிப்பதாயின் அதற்கென தனியான ஒரு செயன்முறை உண்டு. இதனால் சித்த மருத்துவம் கற்றவர்களால் ஆங்கில மருந்துகளை தயாரிக்க முடியாது.மேற்குறிப்பிட்ட சித்த வைத்தியர்களால் ஆங்கில மருந்துகள் விநியோகிக்கப்படுவதை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நேற்றைய தினம் இடம்பெற்ற யாழ். மாநகர சபையின் சுகாதாரக் குழுக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மேலும்,

சபையின் சித்த மருத்துவசாலையின் மூன்று வருடங்களாக தேங்கி இருக்கும் மருந்து தயாரிக்கும் இயந்திரங்கள் மூலமாக தேவையான மருந்துகளைத் தயாரித்து வழங்குவதற்கு உரிய முக்கிய மூலிகைகளைக் கொள்வனவு செய்வதற்கான முதலீட்டைப் பெறுதல்,

யாழ். மாநாகர சபையில் சுகாதாரத் தொழிலாளர்களுக்கான ஆளணி, பற்றாக்குறையாக இருப்பதனால் குறிப்பாக குப்பை அகற்றல், வடிகால்கள் துப்புரவு செய்தல் போன்ற வேலைகளை வருமானம் ஈட்டக்கூடிய இடங்கள் தவிர வருமானம் ஈட்ட முடியாத இடங்களில் மேற்கொள்வதற்கு தனியாரிடம் ஒப்பந்த அடிப்படையில் கொடுத்தல்,

யாழ். மாநகரசபையின் எல்லைகட்குட்பட்ட அனைத்து அரச திணைக்களங்களில் இருந்தும் குப்பைகள், கழிவு நீர் ஆகியவற்றை அகற்றுவதற்கான கட்டணம் அறவிடப்படுதல்,

யாழ். செட்டியார் தோட்டம் பகுதியில் மாநகரசபையினால் குப்பைகள் குவிக்கப்படுவதால் அருகிலுள்ள வீட்டுக் கிணறுகளுக்குள் அக்குப்பைகள் காகங்கள் மூலமாகப் போடப்படுகின்றன. எனவே உடனடியாக அக்குப்பையினை மண்போட்டு மூடுதல் ஆகிய தீர்மானங்களும் இதில் எடுக்கப்பட்டன. (உ-4,43)

# உடல் நலத்திற்கு உகந்த எளிய வழிகள் சில உண்டு
# ஒழுங்கு முறையில் கடைப்பிடித்து ஒழுகுதல் நன்று

காலை எழுந்தவுடன் இரண்டு கிலோ மீற்றர் வழி நடத்தல் யார்க்கும் வனப்பு-நன்று. ஓடுதல் கூடாது என்பதற்காகத் தான் குறைந்தது இரண்டு கிலோ மீற்றர் நடப்பது சிறப்பு என்று கூறப்படு கிறது. நிற்றல், நடத்தல் போன்ற பணி செய்யும் காலங்களை விட படுத்தல், உறங்கல் போன்ற காலங்களில் இதயம் லேசாகப் பணி செய்கிறது. உடல் தரையில் சமநிலையில் இருப்பதால் இதயம் இரத்தத்தைப் பம்ப் செய்வது சுலப மாக அமைகிறது. இப்படி லேசாக இயங்கிக் கொண்டிருந்த இதயம் எழுந்தவுடன் ஓடுவதால் வேகமாக இயங்க வேண்டியுள்ளது. இத்திடீர் தாக்குதலால் இருதயம் பாதிக் கப்பட வாய்ப்புள்ளது. அதனால் எழுந் தவுடன் ஓடாது நடத்தலே நன்று.

### நடப்பது நன்மை

ஆய்வின் படி மருத்துவமனைக ளில் நர்சாகப் பணி செய்பவர்க்கு இருதயவியாதி வருவதில்லை என்று கூறப்படுகிறது. அதற்கான காரணம் அவர்கள் செய்யும் பணி அதிக தூரம் நடப்பது தான் என்று கூறப்ப டுகிறது. ஆனால் நாமோ ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் பணிசெய்யுமிடம்-வியாபாரம் செய்யுமிடம் இருந்தால் கூட நடப்பதில்லை. இருசக்கர வாகனங் களப் பயன்படுத்துகிறோம். முடிந்த மட்டும் இப்பணிகளுக்காகப் பத்து முறை 20 கிலோ மீற்றர் கூட நடக்க லாம் என்பது மேற்சொன்ன ஆய்வால தெரிகிறது.

மேலும், நடப்பதினால் சர்க்கரை நோயாளிகளுக்கு சார்க்கரையின் அளவு குறைகிறது. கொழுப்பு குறைகிறது. மூட்டுகளுக்குப் பயிற்சியாக இருக்கிறது. சுவாசம் சுத்தம் ஆகிறது. வியர்வை யால் இரத்த சுத்தி ஏற்படுகிறது. 'நாள் தோறும் நான்கு கிலோ மீற்றர் சீரான வேகத்தில் நடந்தால் நாடவேண்டாம் வைத்தியரை'

### காலையில் இஞ்சிப் பானம் நன்று

'காலை இஞ்சி, கடும்பகல் சுக்கு, மாலையில் கடுக்காய் எனக் கொள்ள மனிதர்கள் நூறாண்டு வாழலாம்' என்பது பழமொழி மட்டுமல்ல. அனுபவ பூர்வமான உண்மையுங்கூட. ஜீவசத்துக்கள் சிதைக்கப்படாமல் இரசாயனங்கள் கலக்கப்படாமல் கிடைக்கும் வெல்லத்துடன் ஆயுளைக் கூட்டவும் பித்தத்தைத் தணிக்கவும் இளநரையை இல்லாமல் செய்ய வும் இஞ்சியும் பாலும் கலந்து பருகுதலே காலை அருந்த வேண்டிய பானம். கோப்பி குடிப்பது நல்ல தென்று ஆராய்ந்து சொல்லியிருப் பார்கள் எங்கு? வெள்ளையர் நாட்டில்.

## மருத்துவ விளக்கம்

ஆனால் கோப்பி நம் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்றதன்று. இமய மலைச் சாரலில், காஷ்மீர் பனியில் ரம் குடிப்பது நல்லது என்பார்கள். ஆனால் உஷ்ணம் மிகுந்த பகுதியிலி ருக்கும் நாம் இங்கு ரம் குடித்தால் நல்லதா? யோசித்துப் பார்க்கவும். அது போலத்தான் கோப்பி குடிப்பது நல்லதில்லை. கோப்பிப் பவுடரின் சம அளவு சிக்கரி கலக்கப்படுகிறது. கோப்பிப் பவுடர் சமஅளவு சிக்கரிப் பவுடர் என்று ஏன் கூறக்கூடாது? சிக்கரி கலப்பதால் சிறுநீரகங்கள் அதிகம் இயங்க வேண்டியுள்ளது.

இன்ஸ்டன்ட் என்னும் வடிகட்டாத கோப்பியால் பலவித நோய்கள் வருவதாகக் கூறப்படுகிறது. கண்டிப் பாக இன்ஸ்டன்ட் கோப்பியைக் கர்ப்பி ணிகள் உபயோகிக்கக் கூடாது. தேநீர் குடிப்பதால் ஜீரண உறுப்புகள் சுரக்கும் ஊற்றை அழுத்தம் செய்கிறது. தேநீர் பசியைக் குறைக்கும்.

### வாழைப்பூ,பிஞ்சு,பழத்துடன் மோர்,தயிர்சேர்த்திடல்தீது

வாழைப்பூ, வாழைக்காய், வாழைப் பழம் இவைகளை உண்டவுடன் மோர், தயிர் சாப்பிடக் கூடாது. அப்படிச் சேர்த்தால் எதிர்விளைவுகள் ஏற்பட்டு உணவு நச்சுத் தன்மை அடைகிறது. ஜீரணக் கோளாறு ஏற்படும். கோழிக்கறி, மாமிசம் உண்டவுடன் தயிர் சாப்பிடுவதைத் தவிர்த்து விடலாம். பச்சை வெங் காயத்தில் தயிர் சேர்த்த பச்சடியால பாதிப்பு இல்லை.

தயிராகவின்றிப் பீஸாக அருந்தும் போது கூடப் புளிப்புக் கனி, கீரைகள், முள்ளங்கி போன்றவ களை இணைத்துச் சாப்பிடக் கூடாது.

### வாரத்தில் இருமுறை எண்ணெய்க் குளியல்

எண்ணெய் தேய்த்துக் குளித்தல் நம் மண்ணின்நாகரிகம். தமிழர்க்குப் பன்னெடுங்காலமாய் பழக கத்தில் உள்ளது. எண்ணெய்க் குளியலால் கண்ணிற்குக் குளிர்ச்சி உண்டாகும். அன்பு, அமைதி, ஆரோக்கித் தோடு எண்ணிலடங்கா எழில்கள் சேர்க்கும் வண்ணமிகு மேனியக் வைத்திருந்து எண்ணெய் தோலழகைப் பாதுகாக்கும். எண்ணெய் தேய்த்துக் குளிப்பதை, வெளிநாட்டார் கூடாது என்பர். அதை பின்பற்றுதல் பேதமை. உலகத்திற் கெல்லாம் ஒரு நியதி இருக்கலாம். ஆனால் உலகத்தாருக்கெல்லாம் ஒரே மாதிரி உணவு, உடை, உபயோக முறை, பண்பாடு இருக்கவே கூடாது.

எண்ணெய் காய்ச்சி ஆறவைத்து உடம்பில் தேய்த்து அதிக நேரம் ஊறவிடாமல் வெதுவெதுப்பான சுடுநீரில் வாரம் இருமுறை குளிப்போம். நோய்கள் வராது. உடலைக் காப்போம். இதை வலியுறுத்தும் முகத்தான் நம் பெரியோர்கள் ''வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு'' என்றுகூறி னார்கள். ''சனிநீராடு'' என்ற முதுமொழியும் உள்ளது. முக்கியமாக எண்ணெய் தேய்த்துக் குளித்த அன்று மிகவும் சீதளபதார்த்தங்கள், தயிர்ச்சாதம், பன்றி இறைச்சி கூடவே கூடாது.

### நீந்திக் குளித்தல் நலம்

அனைவரும் ஆனந்தம் பொங்க மனைகோர் குளத்தை அமைத்து நீந்தக் கற்போம். நம் தினமும் நீந்திப் பழகுதல், நீந்திக் குளித்தலை வழக்கமாக்கிக் கொள்வதால் நலம். திராவிடர் நாகரிகத்தில் ஹரப்பா மொகஞ்சதாரோ புதைபொருள் ஆராய்ச்சியில் வீட்டிற்கொரு குளம் இருந்ததாக வரலாறு கூறுகின்றது. உடற்பயிற்சிக்காக ஒவ்வொரு பள்ளியிலும் குளம் அமைக்கலாம். சில தனியார் பள்ளிகளில் நீச்சல் கற்றுத் தரப்படுகிறது. வீட்டிற்கொரு குளம் அமைக்க முடியுமா? என்று கேள்வி கேட்கிறார்கள். பலர் பல இலட்சம் செலவில் இரு சக்கர வாகனம் வைத்துள்ளனர்.

ஒரு வீட்டில் மூன்று குடும்பங்கள் இருந்தால் மூன்று கலர் ரி.வி.கள் வைத்துள்ளனர். குறைந்த பட்சம் ஒரிரு ஆயிரம் செலவில் சைக்கி ளாவது வைத்துள்ளனர் பக்திக்குச் சக்தி உள்ளதாக எண்ணும் பக்தர்களுக்கு சுவாமியின் கோவில்கள், பெரிய அளவில் நகரத்திலும், ஊர்கள் பலவற்றிலும் இருந்தும் தெருவிற்குத் தெரு கோவில்கள் இருந்தும்ஒவ்வொரு வீட்டிலும் ரூபா 200 முதல்500 வரை வாடகை வருமளவிற்குப் பூஜை அறை வைத்துள்ளனர். ஏன் ஆரோக்கியத் திற்கும், ஆபத்தில் உயிர் காக்கும் நீச்சலைக் கற்றுக் கொள்ள தினசரி கூடாது? என்பது என் கேள்வி. எனது விருப்பம் அதுவே. உடலில் உள் மற்றும் புற உறுப்புக்கள் அனைத்திற்கும் ஒரே நேரத்தில் பயிற்சியும், வலிமையும் தரும் ஒரே பயிற்சி நீச்சல் தான் என்பதை மறந்துவிட வேண்டாம்.

டாக்டர் க.தனபாலன்

(மருத்துவ அறிவியல் மலர்)

## நிர்வாக சபை தெரிவு

(சுண்டுக்குளி)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நல்லூர் சாதனா பாடசாலை யில் அண்மையில் அதன் தலைவர் கப்ரின் டி.ஏ.எம். குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், நிர்வாக சபை உறுப்பினர் தெரிவும் இடம்பெற்றது. தலைவராக கப்ரின் டி.ஏ.எம். குணசிங்கம், செயலாளராக கே.மனோ கரன், பொருளாளராக கே. ஏகாம்பரம், உபசெயலாளராக ஏ.எஸ் செல்வராஜா, உப தலைவர்களாக கே. நாகேந் திரம், வி.ரி முகுந்தன், நிர்வாக சபை உறுப்பினர்களாக வகீஸ்வரன், எஸ்.கிளிபேட் அன்ரனிப்பிள்ளை எஸ்அப்புத்துரை, ரி. தயாளன், எஸ்ரமணன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ-110)

## தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபன் நடமாடும் மருத்துவ சேவை அண்மையில் வாதரவத்தை, வீரவாணி, அக்காச் சிக்குடியிருப்பு, ஆட்டுப்பட்டிக்கிராமம், இராசகிராமம், குடவத்தை ஆகிய இடங்களில் இடம்பெற்றன.

இதில் சுமார் 30 வரையானோர் கலந்து கொண்டு நன்மையடைந் துள்ளனர். (உ)

## மாநகர சபை உறுப்பினராக நியமனம்

(சுண்டுக்குளி)

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த சமாதான நீதிவான் க.சச்சி தானந்தம் கடந்த மாதம் 27ஆம் திகதி தொடக்கம் யாழ். மாநகர சபை உறுப்பினராக நியமனம் பெற்றுள்ளார். (உ-10)

## யாழ். ப.நோ.கூ.சங்க பணிப்பாளர் சபை உறுப்பினர் இராஜினாமா!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப்பணிப்பாளர் சபை உறுப்பினர் அ.அலெக்சீஸ் கடந்த 25ஆம் திகதி முதல் தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சபை தனது அங்கத்தவர்கள், பாவனையாளர்கள், பொதுமக்கள் மத்தியில் நல்லெண்ணத்தை இழந்து விமர்சனத்திற்குள்ளாகி வருவதால், தான் பதவியில் நீடிக்க விரும்பவில்லை எனத் தெரிவித்து சங்கத்தின் செயலாளருக்கு கடித மொன்றை அனுப்பி வைத்துள்ளார்.(த)

# உள்நாட்டுப் போரினால் 9 இலட்சம் சிறார்கள் பல்வேறு வழிகளிலும் பாதிப்பு

(கொழும்பு)

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக வடக்கு-கிழக்கில் இடம் பெற்று வந்த இன யுத்தத்தினால் சுமார் 9 இலட்சம் சிறுவர்கள் பல்வேறு வழிகளிலும் பாதிக்கப்பட் டுள்ளதாக யுனிசெவ் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மேற்படி யுத்த காலத்தில் 35 ஆயிரம் சிறுவர்கள் வடக்கு-கிழக்கில் கொல்லப்பட்டுள்ளனர்.

போஷாக்கின்மை, போதிய சுகாதார வசதிகள் இன்மை, இடம்பெயர்வு, சித்திரவதை, காணாமல் போதல் உட்பட பல்வேறு இன்னல்களுக் கும் சிரமங்களுக்கும் உள்ளாகி இருப்பவர்களும்,

போரினால் கொல்லப்பட்டவர்களில் அரைவாசிப் பங்கினரும் சிறுவர் களே.

வறுமை காரணமாக வட-கிழக் கில் சுமார் 3 இலட்சம் மாணவர் கள் பாடசாலைக்குச் செல்வதில்லை.

மோதல்கள் இடம்பெற்ற பகுதி களைச் சேர்ந்த 25 சதவீதமான குழந்தைகள் மரணம் அல்லது இடப்பெயர்வு காரணமாக பெற்றோரை இழந்துள்ளனர்.

ஆயிரத்து 200 பிள்ளைகள் போரி னால் ஊனமுற்றவர்களாகியுள்ளனர்.

போரில் குடும்பத்தலைவர் இறந்த காரணத்தினால் 9 ஆயிரத்து 200 குழந்தைகள் குடும்பச் சுமையைக் கருத்தில் கொண்டு வேலைக்குச் செல்கின்றனர் என குறிப்பிடப்பட் டுள்ளது. (உ-2)

## புனர்வாழ்வு முகாம் படுகொலை வாக்குமூல பதிவுகள் நிறைவு

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலை வழக்கின் குற்றவாளிகள் அனை வரினதும் வாக்குமூலப்பதிவுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைந்துள்ளன.

இவ்வழக்கு விசாரணைகள் சம்பந் தமான தொகுப்புரை இம்மாதம் 17ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

மேல் நீதிமன்ற 3 நீதிபதிகள் அடங்கிய குழுவினர் விடுத்த உத்தரவுக்கமையவே இத தொகுப்புரை இடம்பெறவுள்ளது.

இவ்வழக்கு விசாரணைகளின் போது சாட்சியங்கள் போதியதாக இல்லை என்ற காரணத்தால் 23 பேரை மேல் நீதிமன்றம் கடந்த மாதம் விடுதலை செய்திருந்தது.

2001ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ஆம் திகதி நடைபெற்ற இப்படுகொலைச் சம்பவத்தில் 27 தமிழ் இளைஞர்கள் பலியானதுடன் 14பேர் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## இலங்கை - எகிப்து இடையே வர்த்தக உடன்படிக்கை வெகுவிரைவில் கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கையும் எகிப்தும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றில் வெகு விரைவில் கைச்சாத்திடவுள்ளன.

அண்மையில் எகிப்துக்கான விஜய மொன்றை மேற்கொண்ட வெளி விவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, அந்நாட்டு உயர் அதிகாரிகளையும், எகிப்திய தலைவர்களையும் ஹெய் ரோவில் சந்தித்த போது, இச சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கான உடன்பாடு காணப்பட்டது.

இவ்வுடன்படிக்கை தொடர்பாக அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, எகிப்து நாட்டுப் பிரதமரையும், அந் நாட்டு வெளிவிவகார அமைச்ச ரையும் சந்தித்து கலந்துரையாடி யுள்ளார்.

இலங்கையிலிருந்து எகிப்து கொள் வனவு செய்து வந்த தேயிலையின் அளவு அண்மைக்காலமாக வீழ்ச்சி-யடைந்து காணப்பட்டது. இவ்வுடன் படிக்கையின் மூலம் தேயிலையின் கொள்வனவு அளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.(உ-8)

## கஞ்சாத் தோட்டம் முற்றுகை

(கொழும்பு)

கொழும்பில் உள்ள கஞ்சாத் தோட் டம் ஒன்றை சுற்றிவளைத்த கொழும்பு கலால் திணைக்கள அதிகாரிகள் சுமார் 20 இலட்சம் பெறுமதி வாய்ந்த கஞ்சாவைக் கைப்பற்றியுள்ளனர்.

தனமல்வில, தம்பலகல,தேவகிரி ஆகிய இடங்களில் உள்ள சுமார் எட்டு ஏக்கர் விஸ்தீரணமுள்ள கஞ்சா தோட்டமே கலால் திணைக்கள அதிகாரிகளால் சுற்றிவளைக்கப்பட்டது.

இக்கஞ்சாத் தோட்ட சுற்றி வளைப் பின் போது 5பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து மூன்று துப்பாக்கி களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (வ)

## சிறுவர் புனர்வாழ்வு நிலையங்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நிறுவக் கோரிக்கை

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர் களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நிலையங்களை மட்டக்களப்பு, கிளி நொச்சி மாவட்டங்களிலும் நிறுவு மாறு தமிழீழ விடுதலைப்புலிகள் சர்வதேச நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

போரினாலும், படை நடவடிக் கைகளாலும் பெரிதும் பாதிக்கப் பட்டு நிர்க்கதியாகியுள்ள குடும்பங் களைச் சேர்ந்த சிறுவர்கள் தம்முடன் இணைய முற்படுவதாகவும், அவர் களைப் போர் நிறுத்தக் கண் காணிப்புக்குழு ஊடாக பெற் றோரிடம் ஒப்படைக்கின்ற போதும் திரும்பியும் அவர்கள் தம்மிடம் வருவதாகவும் புலிகள் தரப்பினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

## நிர்வாக சபை தெரிவு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டு றவுச்சங்கத்தின் நிர்வாக சபைத் தெரிவு நேற்று இடம்பெற்றது.

புதிய தலைவராக சு:கோபால சிங்கமும், உபதலைவரா்க சி. சச்சிதானந்தனும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். (உ-48)

# கொலம்பியா வீரர் மரணத்துக்கு அமெரிக்கா முழுவதும் துக்கம்

## தேசியக் கொடி அரைக்கம்பத்தில்

(வாஷிங்டன்)

கொலம்பியா விண்வெளிஓடம் வெடித்துச் சிதறி அதில் பிரயாணம செய்த 7விண்வெளி வீரர்கள் குறித்து அமெரிக்காவில் துக்கம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

அமெரிக்க தேசியக்கொடி நாடுமுழுவதும் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது.

விண்கலத்தில் பிரயாணம் செய்த இஸ்ரேலியருக்காக இஸ்ரேலிலும் இந்திய வீராங்கனை கல்பனா சாவ்லாவுக்காக இந்தியாவிலும் துக்கம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

கொலம்பியா விண் வெளிஓட ஆராய்ச்சி தோல்வியில் முடிந்ததும் அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் கூறியுள்ளார்.

### சடலங்களின் பகுதிகள்

கொலம்பிய விண்வெளி ஓடத்தில் சென்ற 7வீரர்களினதும் சடலங்களின் எஞ்சிய பகுதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க விண்வெளிதுறை நாசா அதிகாரிகள் கூறுகின்றனர்.

அந்த உடல் பகுதிகளை அடையாளங்காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வயல்களிலும், நெடுஞ்சாலைகளிலும், வீடுகளின் கூரைகளிலும் சிதறி வீழ்ந்த கொலம்பிய விண்வெளி ஓடத்தின் சிதைவுகள் சேகரிக்கப்படுகின்றன.

கடந்த மாதம் இந்த ஓடம் விண்வெளியில் செலுத்தப்பட்டபோது, எடுக்கப்பட்ட வீடியோப்படங்கள் தற்போது ஆராயப்படுகின்றன. அப்போது ஏதேனும் கோளாறுகள் நிகழ்ந்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

### தனித்தனி விசாரணைகள்

இந்த விபத்துக் குறித்து 3தனித்தனியான விசாரணைகள் இடம்பெறுகின்றதாக செய்திகள் கூறுகின்றன.

அமெரிக்க அரசு சுயேட்டையான விசாரணைக்கான ஆணைக் குழுவினை நியமித்துள்ளது.

நாசாவும், அமெரிக்க நாடாளு மன்றமும் இணைந்தே இந்த விசாரணைகளை நடத்தவுள்ளன. இதன்போது வெப்பத்தினாலா? அல்லது இயந்திர கோளாறினால் ஏற்பட்டதா? என முடிவு செய்யப்படும்.

தற்போது கிடைக்கப்பெற்ற ஒவ்வொருதுண்டு ஆதாரமும் ஆராயப்படுகின்றன.

இத்துயரச் சம்பவத்தையும் பொருட்படுத்தாமல் அமெரிக்காவின் விண்வெளித்திட்டம் தொடரும் என்று அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் அறிவித்துள்ளார்.

### துணிச்சல் மிக்கவர்

கொலம்பிய விண்வெளி ஓடத்தில் சென்று உயிரிழந்த கல்ப்பனா சாவ்லாவின் தந்தை திரு பல்ஹாரி சாவ்லா தனது மகள் மிகவும் துணிச்சல் மிக்கத் தனிச்சிறப்பு வாய்ந்த பெண்ணாக விளங்கினார் என்று கூறியுள்ளார்.

பயணத்தை ஆரம்பித்த பின்னர் தம்முடன் தொடர்பு கொண்டு, விண்வெளிப்பயணம் சரியான முறையில் நடைபெறுவதாகவும், பூமியின் அழகை அங்கிருந்து ரசிப்பதாகவும் ஜனவரிமாதம் 28ஆம் திகதி கடைசியாக கல்பனா சாவ்லா தெரிவித்திருந்த தாகவும் திருமதி சாவ்லா வாஷிங்டன் நிருபர்களிடம் கூறியுள்ளார்.




சூரிய ஒளியிலிருந்து பெரும் ஆற்றலைப் பயன்படுத்தி ஓடும் சைக்கிளை ஜப்பானின் டொயோடோ மோட்டார் கோப்பரேஷன் தொழிலாளர்கள் வடிவமைத்துள்ளனர். சைக்கிளின் ஹான்டில் - பாரில் உள்ள தகடுகள் ஹைட்ரஜன் (நீர் வாயு) என்ற பொருளைத்தயாரிக் கின்றன. பின்புறத்தில் உள்ள செல்கள். முன்சக்கரத்துடன் இணைக்கப் பட்டுள்ள என்ஜினை இயக்க ஆற்றலைத் தருகின்றன. (பி)

## தற்கொலை தாக்குதல் நடக்கும்

(பேர்லின்)

ஈராக் மீது போர் தொடுத்தால் அமெரிக்க இலக்குகளை தற்கொலை படைகள் தாக்கக் கூடும் என்று ஈராக் கூறியுள்ளது.

ஈராக் துணை அதிபர் தாஹய யாசின் ஜெர்மனி பத்திரிகைக்க பேட்டி அளித்தார். (பி)



பஞ்சாப் மாநிலம் லூதியானாவில் சனிக்கிழமை நடைபெற்ற கிலா ராய்ப்புர விளையாட்டுப் போட்டியில், பலர் அமர்ந்துள்ள டிராக்டரைத் தனது உடல் மீது ஏறச் செய்து சாதனைபடைத்த இளைஞரையே இங்கு காண்கிறீர்கள்.

# சந்திரனுக்குச் செல்ல விரும்பிய கல்பனா

(வாஷிங்டன்)

அமெரிக்க விண்வெளி ஓடம் வெடித்துச் சிதறியதால் இறந்துபோன இந்திய வீராங்கனை கல்பனா சாவ்லா சந்திரனுக்குச் செல்ல வேண்டும் என்ற இலட்சியம் கொண்டிருந்தார்.

விமானப் பொறியில் படித்த அவர் என்றாவது ஒருநாள் சந்திரனுக்குச் செல்ல வேண்டும் என்று லட்சியம் கொண்டிருந்தார்.

சின்னச்சின்ன விஷயங்கள் தான் இத்துறையில் எனக்கு ஆர்வம் ஏற்படக் காரணமாக இருந்தன. எனது விருப்பத்தை நான் தெரிவித்த போது பலரும் என்னைக் கேலி பேசினர் என்று கடந்த மாதம் அளித்த பேட்டியில் கல்பனா கூறியிருந்தார்.



என் ஊரில் விமானப் பயிற்சி மையத்திலிருந்து புறப்படும் விமானங்களை ஆர்வமுடன் பார்ப்பேன். அவை புறப்பட்டுச் செல்லும் போது, நானும் என் சகோதரனும், மோட்டார் சைக்கிளில் அதைப் பின்தொடர்ந்து செல்வோம். அந்த ஆர்வம்தான் என்னை இத்துறையில் ஈடுபட வைத்தது என்றும் அவர் கூறியுள்ளார்.

இவர் அமெரிக்க விண்வெளி ஆய்வு மையத்தில் விண்வெளி வீரராக 1994இல் தேர்வு செய்யப்பட்டார். 1997இல் முதல்முதலாக கொலம்பியா விண்வெளி ஓடத்தில் பயணம் செய்து பூமிக்கு பலமுறை சுற்றி வந்தார். (பி-2)

# ஈராக் மீதான தாக்குதலுக்கு தலைமை வகிக்க அமெரிக்கா தயார்

## புஷ் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

ஈராக் விவகாரம் குறித்த தீர்மானம் இன்னும் ஒரு சில வாரங்களில் நிறைவேற்றப்பட்டு விடுமென அமெரிக்காவும் அதன் கூட்டணியும் தெரிவித்துள்ளன.

ஈராக் மீது தாக்குதல் நடத்துவதற்கு அதிகாரத்தை ஐ.நா கள் பாதுகாப்பு சபை அமெரிக்கா தலைமையிலான கூட்டணிக்கு வழங்கினால் அதை ஏற்றுக் கொள்வதாகவும் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பாதுகாப்பு சபையின் அனுமதியைப் பெற வேண்டும் என்ற கட்டாயம் அமெரிக்காவக்க இல்லை என்றும் அவர் சுட்டிக்க காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பதவிக் கவிழ்க்கவும் ஈராக் வசமுள்ள பயங்கர ஆயுதங்களை களையவும் தாம் ஒருபோதும் பின்னிற்கப் போவதில்லை என்றும் அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்தார். (பி-9)

# நைஜீரியாக் குண்டு வெடிப்பில்; 20பேர் மரணம்

(அபுஜா)

நைஜீரியா நாட்டின மாபெரும் நகரான லாவோஸில் நடந்த் குண்டு வெடிப்பில் 20பேர் உயிழந்தனர்.

நகரின் நடுப்பகுதியில் கடைகள குடியிருப்புக்கள் நிறைந்த கட்டிடத் தொகுதியில் இக்குண்டு வெடிப்பு நேற்று ஏற்பட்டிருக்கின்றது.

இக்குண்டுவெடிப்பு எப்படி ஏற்பட்டது என்பதில் சந்தேகங்கள் நிலவுகின்றது.

வாயுக்கசிவு, ஜெனரேற்ரர் தீப்பற்றியமை, ஆகியவை காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இதுவரை 20 உடல்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. உயிரிழபபுக்கள் இன்னமும் அதிகமாக இருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. (பி-9)

# அண்டார்டிகா சிகரத்துக்கு போப்பாண்டவர் பெயர்

(வாடிகன்)

அண்டார்டிக்காவில் ஒரு சிகரத்துக்கு போப்பாண்டவர் இரண்டாவது ஜான் போல் பெயர் சூட்டப்படவுள்ளது.

வாடிகன் அதிகாரிகள் இந்தத் தகவலைத் தெரிவித்தனர்.

அந்தச் சிகரம் 1110மீற்றர் உயரம் கொண்டதாகும்.

போப்பாண்டவர் இர்ண்டா வது ஜான் போல் பதவிக்கு வந்து 25ஆண்டுகள் ஆகின்றன. இவ்வளவு காலம் தொடர்ந்து இப்பதவியில் இதற்கு முன் யாரும் இருந்தது கிடயாது. இதைக் குறிக்கும் வண்ணமே அந்த சிகரத்துக்கு போப்பாண்டவர் பெயர் சூட்டப்படவுள்ளது. (பி)

WORLD NEWS உலக தரிசனம்

# பத்திரிகையாளர் சுட்டுக்கொலை

(புதுடில்லி)

ஜம்மு-காஷ்மீர் நகரில் பத்திரிகையாளர் சர்வெஸ் மொகமட் சுல்லத்தான் என்பவர் நேற்று மாலை பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சுமார் 6.15 மணியிளவில் கட்டுக்காவலில் மிகுந்த பகுதியிலுள்ள பத்திரிகைளாளரின் அலுவலகத்துள் நுழைந்த பயங்கரவாதிகள் அவரைத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனால் காயமுற்ற அவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட போது வழியில் உயிரிழந்தார். (பி-9)

ஆயுதப் பரிசோதகர் குழு

# தலைவர் மீண்டும் பாக்தாத் செல்வார்

(வாஷிங்டன்)

ஐ.நா ஆயுதப் பரிசோதனைக் குழுத்தலைவர் ஹான்ஸ்பிளிக்ஸ் மீண்டும் ஈராக்செல்ல உள்ளார்.

ஹான்ஸ்பிளிக்ஸ் எதிர்வரும் 8ஆம் திகதி பக்தாத் செல்வதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது.

எனினும் ஆயுதப் பரிசோதகர்கள் கடிதம் மூலம் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு ஈராக் அதிகாரி கள் கட்டுப்பட்டால் மட்டமே அவரது விஜயம் சாத்தியப்படும் என பிளிக்ஸன்பேச்சாளர் ஒருவர் கூறியுளளார்.

இதேவேளை இவ்வாறான விஜயங்களிற்கு முன்நிபந்தனைகள் விதிக்கப்படுவதில்லை.

இந்த விஜயம் சாதாரண விஜயமே என ஈராக் உதவி ஜனாதிபதி தகா ஜஸ்சிங் கனடான் கூறியுள்ளார். (பி-9)

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு -குறள்-

# வலம்புரி

## யாருக்குச் சுதந்திரம்

இலங்கையின் 55வது சுதந்திர தினம் இன்று.1948இல இலங்கை சுதந்திரமடைந்த தெனக்கூறப்படுகிறது. ஆனால்,நாட்டின் சகல பிரஜைகளும் அந்தச் சுதந்திரத்தை அனுபவித்தவர்களாவென்றால் இல்லையென்று அடித்துக் கூறிவிடலாம்.பிரித்தானியத்தின் காலனித்துவத்திலிருந்து.விடுபட்ட இலங்கை இனவாதம் என்ற பேயிடம் அகப்பட்டுக் கொண்டது.

இதனால் உள்நாட்டுக்குளளேயே அடிமைத்தனம்,அடக்குமுறை,அடிப்படை மனித உரிமை மறல் போன்ற பல்வேறு காடைத்தனங்கள் தலைவிரித்தாடுகிறது.

1948இல் சுதந்திரமடைந்த இலங்கை,சிங்கள இனத்திற்குரியதென்ற கருத்து மேலேங்கியதன் காரணமாக,சுதந்திரமடைந்து 55 ஆண்டுகள் கடந்த போதிலும்,நாட்டில் பொருளாதார வளர்ச்சியோ, பொருளாதார அபிவிருத்தியோ ஏற்பட்டதாகப் பதிவுகள் இல்லை.

ஆக இலங்கை பௌத்த தேசம்,சிங்களவர்கள் ஆளப்பிறந்தவர்கள் என்ற வரட்டுக் கௌரவம் மட்டுமே இப்போது இலங்கையின் தலையில் ஏற்றபபட்டுள்ளது.

தற்போதைய உலக மயமாதலின் அடிப்படையில் உலக நாடுகளின் முன்னேற்றம் விண்வெளியைத் தாண்டி நிற்கும் போது,வெளிநாடுகளிடம் கையேந்தி-இரந்து கடனில வாழ்க்கை நடத்தும் இலங்கையில் மட்டும்,இன்னமும் இனவாதக் கருத்துக்கள புரையோடியுள்ளதெனில் நாட்டின் முன்னேற்றத்திற்கு வழியேதும் இருப்பதாக எதிர்வு கூற முடியாது.பௌத்த சிங்கள மக்களுக்கு மட்டுமே இந்த நாடு சொந்தம் என்ற உணர்வு இருக்கும் வரை நாட்டின் கடன்சுமையும் இருக்கவே செய்யும்.

சிங்கக் கொடியை ஏற்றி வைதது முப்படைகளும் அணிவகுத்து மரியாதை செலுத்துவதற்குத் தான் சுதந்திரம் என்றால்,அந்த சுதந்திரம் கிடைத்து 55ஆண்டுகள் ஆகிவிட்டன என்பதை ஏற்க முடியும்.

ஆனால்,சுதந்திரம் என்பது அதுவன்று.ஓர் இனம் தனது வாழ்விடத்தில் பூரண பாதுகாப்போடு குடியிருக்க முடியாத நிலையில் அதனைச் "சுதந்திரம்"எனக் கூறுவது மிகப் பெரும் குற்றமாகும். நாட்டின் சுதந்திரதினம் என்பது அந்நாட்டில் வாழுகின்ற அனைத்தின மக்களினாலும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட வேண்டியது.ஓர் இனத்திற்கு மட்டும் உரியதன்று.தமிழருக்கும் தேசியக் கொடியில இடம் ஒதுக்கிவிட்டால் அது சுதந்திரம் அல்ல. உயர் பாதுகாப்பு வலயத்தில் குடியிருக்க விட்டால், அதனை ஓரளவு சுதந்திரமாகக் கருதலாம்.வெறும் வார்த்தை ஜாலங்களால் சுதந்திரத்தை பகிர்ந்து விடமுடியாது.சுதந்திரம உள்ளுணர்வுடன் கலந்தது.அது ஆத்மார்த்தமானது. அந்தச் சுதந்திரத்தை சிங்கக் கொடி தமிழருக்கு வழங்கத் தவறின் நந்திக் கொடி வழங்க வேண்டும்-வழங்க வைக்க வேண்டும். அதற்குப் பெயர் தான் சுதந்திரம்.

# பிரபாவுடனான ஒப்பந்தத்தின் பின்னர் வெளிநாட்டு நிதி உதவிகள் பெருகி வருகின்றன

## எல்லைக்கிராம மக்களுக்கு பிரதமர் எடுத்துக் கூறுகை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடம் செயது கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையினை தொடர்ந்து, வெளிநாட்டு நிறுவனங்களின் நிதி உதவிகளும் அது தொடர்பானவாக்குறுதிகளும் பெருக ஆரம்பித்துள்ளன.

வடக்கு- கிழக்கின் எல்லைக் கிராமங்களின் மீளக்குடியமரும் மக்களின் பிரச்சினைகள் குறித்து நேரில் ஆராய்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த சனிக்கிழமை அப்பகுதிகளுக்கு விஜயம ஒன்றை மேற்கொண்டார்.

ஹெக்கிராவை கிராமத்துக்கு இவ்விதம் விஜயம் செய்த பிரதமர்,சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து மக்களுக்கு விளக்க மளித்த போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் மக்களுக்குத் தொடர்ந்தும் விளக்கமளிக்கையில், யப்பான் தலைநகர் ரோக்கியோவில் யூன் மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில்மேலும நிதி உதவிகள் கிடைக்கும்.

அந்நிதி மூலம் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்பமுடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

எந்தவித நிதிவளமும் அற்ற நிலையில் இந்த அரசாங்கத்தை நான் பொறுப்பேற்க வேண்டி இருந்தது.


ஆனால்,ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின்அபிவிருத்தித் திட்டப் பலன்களை இவ் வருடம் மக்கள் பெற்றுக் கொள்வார்கள் எனவும் உறுதியளித்தார்.

மேலும் கூறுகையில்,

தெற்காசிய பிராந்தியத்தின் விமானப்போக்குவரத்துத்துறையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இலங்கை அமைந்திருப்பதறகான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இரண்டு லட்சத்துக்கும் அதிகமான சிறியதொழில் முயற்சிகள் மேற கொள்ளப்படவுள்ளன. இதனமூலம் அதிக எண்ணிக்கையான மக்கள தொழில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

வளைகுடாயுத்தம் ஆரம்பித்தால்,அதனால் ஏற்படக்கூடிய அனைத்துப்பாதக விளைவுகளையும் அரசாங்கம் எதிர் கொள்ளத்தயாராக இருக்கின்றது என்று குறிப்பிட்டார். (உ-8)



# மண்கும்பானில் சட்டவிரோத மண் அகழ்வால் பாரிய குழிகள்

## வெள்ளம் தேங்குவதால் தொற்றுநோய் அபாயம்

(மண்கும்பான்)

மண்கும்பானில் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இரவோடு இரவாக லொறிகள்,உழவு இயந்திரங்களில் இப்பகுதியில் கள்ளமாக மண் ஏற்றி யாழ். நகரப்பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

இதன் காரணமாக இப்பகுதியில் இருந்த மண்மேடுகள் பலவும் காணாமல் போயியுள்ளதுடன், தற்போது அங்கு பாரிய குழிகள் தோன்றியுள்ளன.

இக் குழிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் இப்பகுதி மக்கள் தொற்று நோய் அபாயத்தினையும் எதிர்நோக்கியுள்ளனர்.

இவவாறான செயலில் ஈடுபட்ட பலர் கண்டுபிடிக்கப்பட்டு தணடப் பணம் அறவிடப்பட்ட போதிலும், அவர்கள் மண்டும் மீண்டும் இச் செயலில் ஈடுபடுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை,இது விடயம் தொடர்பாக அரச அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் அவர்கள் மௌனம் சாதிப்பதாக பொது மக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது. (உ-55)

# வடக்கு மின் விநியோகத்திற்கு ஜேர்மன் பூரண ஒத்துழைப்பு

## இல. மின்சாரசபை பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு மின் சாரத்தினை பூரணமாக ஏற்படுத்தும் திட்டத்தகு ஜேர்மன் அரசு முழுமையான ஒததுழைப்பை வழங்குவதற்கு முன் வந்துள்ளது.

நேற்றைய தினம் யாழ்ப் பாணத்துக்கு விஜயம் செய்திருந்த இலங்கை மின் சார சபையின் பொது முகாமையாளர் டி. ஜீ.டி.சீ. விஜயரத்தின யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் சபை ஊழியர்களால் வழங்கப்பட்ட பொது வரவேற்பில் பங்கு கொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை மின் சாரசபையின் வட பிராந்திய பிரதேச முகாமையாளர் எஸ்.முத்துரத்தினானந்தா தலைமையில் நடைபெற்ற இவ் வரவேற்பு வைபவத்தில் பொது முகாமையாளர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

கடந்த 20 வருடங்களாக கஷ்டப்பட்டுவருகின்ற யாழ்ப்பாணத்தவர்களுக்கு நாம் உதவ வேண்டும்.நான் ஏ-9 பாதையினால் வரும் போது ஒரு மின் கோபுரத்தைக் காண முடியாமல் போய் விட்டது. மக்களின் துன்பங்களையும் இன்னல்களையும் நாம் போக்க வேண்டும்.

ஜேர்மன் அரசின் உதவியுடன் சுன்னாகம், கிளிநொச்சியில் உப மின் நிலையங்களை அமைப்பதற்கான பாரிய பணிகளை நாம் செய்ய வேண்டும் எனவே,இனி வருகின்ற இரண்டு வருடங்கள் மிகவும் கடினமான காலமாக இருக்கப்போகின்றன. சபை ஊழியர்கள்,பொதுமக்களின் நன்மை கருதி அர்ப்பணிப்புடன் பணி செய்யத் தயாராக இருக்கவேண்டும்.

இதே சமயம்,எம்மிடம் போதிய வாகனங்கள்,வளங்கள், பயிற்சி பெற்ற ஊழியர்கள் மற்றும் தராதர மிக்க மின் பொறியியலாளர்களும் இல்லாமல் இருக்கின்றனர். இந் நிலையிலும் நாம் எமது பணிகளைச் சவால்களாக ஏற்றுச் செய்ய வேண்டிய தேவை உள்ளது. எமக்கு முன்னே பெரிய பணி உள்ளது என்பதை ஒவ்வொரு ஊழியர்களும் கருத்தில் கொண்டு செயற்படவேண்டும் என்றார்.

இவ்வரவேற்பு வைபவத்தில் 500க்கு மேற்பட்ட மின்சாரசபை ஊழியர்கள் பங்கு கொண்டிருந்தனர். (உ-77)

## பொலிஸ்மா அதிபர் வவு.விரைவு

(வவுனியா)

பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் வவுனியாவுக்கு சென்றுள்ளார்.

இவர் தனது திடீர் விஜயத்தின் போது ஓமந்தைப் பிரதேசத்திற்கும, ஆலயங்களுக்கும் சென்றதுடன், வவுனியாவில்கட்டப்படடு வரும் வைத்தியசாலையையும் பார்வையிட்டுள்ளார்.

வவுனியா சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரையும் இவர் சந்தித்துப் பேசி யுள்ளார். (வ)

## துடுப்பாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரார் அக்கடமி, திருநெல்வேலி கணேசன் அக்டமி மாணவர்களுக்குகிடையிலான துடுபபாட்ட, வலைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதனத்தில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில், பிரதம விருந்தினராக அரியாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ் ரி. பதமநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (உ)

## 13 கோடி மோசடி

(கொழும்பு)

மலையக தொழிற்சங்கம் ஒன்றில் 13 கோடி ரூபாவிற்கு அதிகமான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இம்மோசடி குறித்து சம்பந்தப்பட்ட தொழிற்சங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனினும்,வெறுமனே பதவிகளில் மட்டும மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளன. (உ-3)


## ஓம் தினசரி தியானம்

### கடவுள் இருப்பிடம்

கடவுள் உன் இதயத்துள் இருக்கிறார். அவர் உன்னிடத்திலும், நீ அவரிடத்திலுமாக இருக்கிறீர்கள. அவரை உன் இதயத்துள் தேடு. நீ அவரை அங்கு காணாவிட்டால், எங்குமே காணமாட்டாய்.

இறைவனுடைய தரிசனம் உன்னுடைய ஆசையைப் பொறுத்தே தான் இருக்கிறது.நீ உண்மையாகவே ஆண்டவனை விரும்பினால், அவருக்காக ஏங்கினால் அவர் உடனே உன்முன் தோன்றுவார்.

மனத்துக்கும் இந்திரியங்களுக்கும் புலப்படாதவரும் எங்கும் ஊடுருவி நிறைந்திருப்பவருமான பரபிரமத்தில் உன் மனதைச் செலுத்து, வெற்றி என்னுடையதே.

சுவாமி சிவானந்தர்


# ஐ.தே.மு. அரசாங்கத்தின் முயற்சிகளை. எதிர்ப்போம்

## அனுராதிஸ்ஸநாயக்க

(கொழும்பு)

நீர் வளங்களையும் விவசாயக் காணிகளையும் விற்பதற்கு ஐக்கிய தேசய முன்னணி அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாக மக்கள விடுதலை முன்னணி பாராளுமன்ற உறப்பினர் அனுராதிஸ்ஸ நாயக்க அனுராதபுரத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேச்சுகையில் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,விவசாயத்துறை சம்பந்தமான பல பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அமைச்சர்கள் இருந்த போதிலும் அத்துறைசார் பிரச்சினைகள் இன்னமும் தீரவில்லை அதற்கு எதிர்மாறாக மேலும் பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டே செல்லுகின்றன.

அரசாங்கத்தினால் அடுத்தமாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ள நீர்வள அதிகார சபை சட்ட மூலத்தை தோற்கடிக்கப்போவதாகவும் தெரிவித்தார். (உ-8)

## ஒருமாத சம்பள முற்பணம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் ஒரு மாத கால சம்பள முற்பணம் வழங்க ரணில்விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மைல் விடுத்த வேண்டுகோளுக்கமைய .பிரதமர் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

இச்சம்பள முற்பணக் கொடுப்பனவு புனிதஹஜ்பெருநாளுக்கு முன்னதாக வழங்கப்படவுள்ளது. (உ-8)

## யாழ்மாவட்டத்தில்

# சாரதி அனுமதிப்பத்திரம் 440 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இந்த ஆண்டில் ஜனவரி மாதத்தில் மட்டும் 755 பேர் சாரதிஅனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பித்துள்ளதாக மோட்டா போக்குவரத்துத் தினணக்கள யாழ்.அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 440 பேருக்கு இற்றைவரை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய 315 பேருக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஆண்டில் 7 ஆயிரத்து 596 பேர் சாரதி அனுபதிப்பத்திரம் பெற விண்ணபபித்த போதிலும் 5 ஆயிரத்து 30 பேர் மட்டுமே இற்றை வரை அதனைப் பெற்றதாகவும், எழுத்து மற்றும் செய்முறைப் பரீட்சையில் சித்தியடையத் தவறிய ஏனைய 2 ஆயிரத்து 266 பேருக்கும் அனுமதிப்பத் திரங்கள் பெற சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## ஆண்டு 8-10 வரை மூன்று பாடங்களை

# ஆங்கிலத்தில் போதிக்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் உள்ள பாடசாலைகளில் ஆண்டு 8 தொடக்கம் ஆண்டு 10 வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கு மூன்று பாடங்களை ஆங்கிலமொழி மூலம் கட்டாயம் கற்பிக்கும் திட்ட மொன்றை அமுல் செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சர் டாக்டர் கருணசேன கொடித்துவக்குத் தெரிவித்துள்ளார்.

பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர்மடக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்விப்பொதுத்தராதர ம்ட்டத்தில் மூன்று பாடங்களை ஆங்கிலமொழிமூலம் கற்பிப்பதற்குத் தற்போது வசதிகள் செய்யப்படுகின்றன. தற்போதைய சூழ்நிலையில் ஆங்கில மொழியில் கற்பிப்பதற்கு ஆங்கிலத்தில் தேர்ச்சியும், பயிற்சியும் பெற்ற ஆசிரியர்கள் இல்லை. இதனை நிவர்த்தி செய்வதற்கு ஆங்கில ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி அளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கல்வி கற்கும் மாணவர்களானலும் சரி, ஆசிரியர்களானாலும் சரி மிகவும் சொற்ப அளவினரே ஆங்கில மொழியில் பரீட்சையம் உள்ளவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ம)

### 55வது சுதந்திர....

ஏற்பாட்டின் பிரகாரம் குடாநாட்டிலுள்ள அரச திணைக்களங்கள்,கூட்டுத் தாபனங்கள் மற்றும் சபை அலுவலகங்களில் தேசியக் கொடி பறக்கவிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்ட அரச செயலகத்தில் இன்று காலை 8மணிக்கு யாழ். அரசாங்க அதிபர் செ.பத்ம நாதன் தேசிய கொடியை அமைதியான முறையில் ஏற்றிவைக்கின்றார். இந்நிகழ்வில் யாழ்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்,அரச செயலக உயர் அதிகாரிகள் மற்றும் படைத்தரப்பின் உயர் அதிகாரிகளும் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது இவ்விதமிருக்க, குடாநாட்டிலுள்ள அனைத்து கல்விசார் அமைப்புக்களிலும் கறுப்பு கொடியைப் பறக்கவிட்டு தமது எதிர்ப்பைக் காட்டும்படி கல்விசார் பொதுஅமைப்புக்களின் பேரிணையம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதன பின்னர் இடம்பெற்ற முதலாவது சுதந்திர தினக்கொண்டாட்டம் இது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

மேலும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பொலிஸ் நிலை யங்கள் மற்றும் படைத்தரப் பினரின் முகாம்களிலும் சிங்கக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தககதாகும்.

(இ-77-4)

### மீண்டும்...

வரும். சமாதான முயற்சிகளை சர்வதேச சமூகம் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளது. இதனடிப்படையில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் யப்பான் டோக்கியோ நகரில் நடைபெறும் போது அதில் உலக நாடுகள் பங்கு கொண்டு தமது ஆதரவையும், உதவிகளையும் தெரிவிக்க வுள்ளன என்றும் கூறினார். (ம)

## தொழிற்சங்கம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களை ஒன்றிணைத்து தொழிற்சங்கம் ஒன்று இன்று காலை 10 மணிக்கு மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச சங்கக் கொத்தணியில் அங்குரார்ப பணம் செய்துவைக்கப்பட வுள்ளது. (இ-5-232)

## சைக்கிளை மோதிய வான் வழிமறிக்கப்பட்டது

(மண்கும்பான்)

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளை மோதித் தள்ளிவிட்டு தப்பிச் சென்ற வானை பொதுமக்கள் வழிமறித்து தடுத்து நிறுத்தினர்.

நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மானிப்பாயைச் சேர்ந்த இளம் பெண்ஒருவரின் சைக்கிளே வானால் இடித்துச் சேதமாக்கப்பட்டது.

இதனால் பொதுமக்களுக்கும் வாகனச்சாரதிக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றது.

இதனையடுத்து வாகனச் சாரதி சைக்கிளுக்கு ஏற்பட்ட சேதத்தை திருத்திக் கொடுக்க இணக்கம் தெரிவித்தார். (இ-55)

### எதிர்க்கட்சி...

இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக இந்திய அரசு மிகுந்த அக்கறையுடனும், சிரத்தையுடனும் செயற்படுமென்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மகிந்தராஜ பக்ஷி மேலும் பல இந்தியத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாக எதிர்க் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## மாநகர சபை உறுப்பினராக பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை உறுப்பினராக, ஓய்வு பெற்ற ஆசிரியர் கனகரத்தினம் சத்தியானந்த சிவம் நேற்று மாநகர சபை முதல்வர் எஸ்.கந்தையன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாநகர சபையின் முன்னாள் முதல் வருமான என்.ரவிராஜ்இன் வெற்றிடத்திற்கே சத்தியானந்த சிவம் கூட்டணியால் நியமிக்கப் பட்டுள்ளார். (இ)

## விளையாட்டுச் செய்தி

# சம்பத்திரிசியார் கல்லூரியிடம் ஸ்கந்தவரோதயா தோல்வி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கிரிக்கெற் சங்கஆதரவில்பாடசாலைகளுக்கிடையில் 1 9வயதுக்குட்பட்டோருகஊன கிரிக்கெற் சுற்றுப்போட்டிகள் கடந்த வாரம் ஆரம்பமாகின. கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ் சம்பத்திரிசியார் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரிக்குமிடையிலான கிரிக்கெற் போட்டி ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் சம்பத்திரிசியார் கல்லூரி அணி ஒரு இனிங்ஸ் மற்றும் 77 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சம்பத்திரிசியார் கல்லூரி அணி 296 ஓட்டங்களைப் பெற்று 7 இலக்குகளை மட்டுமே இழந்தது. இவ் அணிசார்பாக விநோதன் 89 பந்துகளை மட்டும் எதிர் கொண்டு 121ஓட்டங்களைக் குவித்தார். கடந்த வாரம் யூனியன் கல்லூரிக்கெதிரான போட்டியில் இவர், பந்து வீச்சில் ''ஹட்ரிக்'' சாதனையையொன்றை நிலைநாட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி தனது முதல் இனிங்ஸில் 116 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்ஸில் 103 ஓட்டங் களையும் பெற்று தனது சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் சம்பத்திரிசியார் கல்லூரி அணிசார்பாக லொயிட்-- முதலாவது இனிங்ஸில் 5இலக்குகளையும் இரண்டாவது இனிங்ஸில் 6 இலக்குகளையும் கைப்பற்றினர்.ராஜேந்திரன் முதலாவது இனிங்ஸில் 4 இலக்குகளையும் அணித் தலைவர் கிரிசாந்தன் இரண் டாவது இனிங்ஸில் 2 இலககுகளையும் கைப்பற்றினர்.(நு-55)

### பாதுகாப்பு....

இப் பேச்சுவார்த்தைகளின் போது வடக்கில் உள்ள அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக அரசதரப்பு பிரதிநிதிகளும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதி களும் நான்காம் சுற்றுப் பேச்சு வார்த்தையின் போது கலந்துரை யாடிய விபரங்கள் தொடர்பான விளக்கங்கள் சதீஸ் நம்பியா ருக்கு வழங்கப்பட்டன. இவ்விளக் கங்களில் பாதுகாப்பு உப குழுவின் தேவைகள், மோதல் தவிர்ப்பு என்பன முக்கியத்துவம் பெற்றிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் இருந்து படையினரை வெளியேற்றி விட்டு அப் பிரதேசங்களில் மக்களை குடியமர அனுமதிப்பதாயின், தான் முன் கூறியது போன்று விடுதலைப் புலிகளிடம் உள்ள சாதாரண மற்றும் கனரக ஆயுதங்களின் செயலிழப்பை வற்புறுத்த வேண்டும் என்று பாதுகாப்பு அமைசின் செயலாளரிடமும் அமைச்சர் மிலிந்த மொறகொடவி டமும் சதீஸ் நம்பியார் வற்புறுத திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் முப்படைத் தளபதிகளையும், பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராசா வையும் சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தையின் போதும் பாதுகாப்பு வலயத்தை தொடர்ந் தும் வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தையும் நம்பியார் வலியுறுத்திக் கூறியுள்ளார். இச்சந்திப்பின் போது விஷேட அதிரடிப் படைத் தளபதியும் உடனிருந்தார்.

இதேவேளை, சதீஸ் நம்பியார் யாழ்ப்பாணம் வந்து இராணுவ உயரதிகாரிகளைச் சந்திப்பதுடன் அதி உயர் பாதுகாப்பு வலய எல்லைப் பிரதேசங்களுக்கும் நேரில் சென்று பார்வையிட வுள்ளதாக இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, சதீஸ் நம்பியார் இந்தியா திரும்பியதும் தனது விரிவான அறிக்கையை இலங்கை அரசிற்கு அனுப்பி வைப்பார் என தகவல அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(ம-5)

### சாதாரண...

காவலர் ஒருவரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின அலுவலகம் அனுப்பிவைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகினறது. தளபதிகளுக்கு சலூட் மரியாதை செலுத்த வேண்டிய ஒரு சாதாரண சிப்பாய்க்கு மூத்த இராணுவத் தளபதிகள் சலூட் மரியாதை செலுத்தியமை அவர்களின் கௌரவப் பிரச்சினைக்கு வழிகோலியது. சீருடையுடன் கூடிய இந்த ஒத்திகையில் இராணுவத் தளபதிகளும், பொலிஸ் தலைமை அதிகாரியும் பங்கு பற்றியிருந்தனர் எனவும் இவ்வாறு மூத்த அதிகாரிகள் ஒன்றாக சுதந்திர தின ஒத்திகை நிகழ்ச்சியில் பங்குபற்றியமை இதுவே முதல் தடவை எனவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதேவேளை யுத்த காலங்களில் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் சிறிதாக நடை பெற்றது. தற்போது பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## நெடுந்தீவுக்கு இன்று விஜயம்

(நெடுந்தீவு)

தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி தலைமையிலான குழுவொன்று இன்று நெடுந்தீவுக்கு விஜயம் செய்யவுள்ளது.

நெடுந்தீவுக்கு விஜயம் செய்யவுள்ள இக் குழுவினர் அங்கு மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராய்வர். (இ)

### சதீஸ்....

ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்தும் இச சந்திப்பின் போது விசேடமாக ஆராயப்படதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)

யாழ் கந்தர்மடம் – பழம் வீதி,ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய

மஹா கும்பாபிஷேகம்

கர்மாரமபம் : சித்திரபானு தை 20 (03.02.2003) திங்கள் காலை 6.00 மணி
யாகாரம்பம் : சித்திரபானு தை 21(04.02.2003)செவ்வாய் காலை 6.00 மணி
பக்தர்கள் எண்ணெய்க்காப்பு : சித்திரபானு தை 23 (06.02.2003) வியாழன் காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
மஹா கும்பாபிஷேகம : சித்திரபானு தை 24(07.02.2003)வெள்ளி காலை 8.50 மணி முதல் 9.30 மணி வரை

மஹா கும்பாபிஷேக புனித நாளில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

குறிப்பு : கும்பாபிஷேகம் நடைபெறும் தினத்தில் பால்,தயிர்,புஷ்பம்,இளநீர், பூமாலை, தேங்காயெண்ணை முதலிய அபிஷேகத்திற்குரிய பொருட்களை வழங்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

சிவஸ்ரீ ப.சோமஸ்கந்த சிவாச்சாரியார்
ஆதீனகர்த்தா
ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்

இங்ஙனம்
ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்
திருப்பணிச்சபை (6517)

இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்

ஸ்ரீ சோடாநிகரை பகவதி அம்மன் அருள் பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளீ அம்மன் வாக்குப்பெற்ற இந்திய பரம்பரை ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத் தடையா? தொழிற் பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எவ்வித பிரச்சினைகளுக்கும் தக்கபரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

மணிசாமி P.T.R

பாண்டீஸ்வரி அம்பாள் அம்மா

யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி,

இல. 54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்)
பார்வையிடும் நேரம் : காலை 9 மணி முதல் மாலை 4.00 மணிவரை.

[C/5522]

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.02.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.